Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 15

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 1 -00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி சித்திரை 19ஆம் நாள் துல்ஹஜ் 18 (1-5-64) வெள்ளிக்கிழமை இதழ் 80

# ஆர்ப்பாட்ட ஊர்வலம்

## மேதின கூட்டங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இடதுசாரி ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டம் இன்று மாலை 5-30 மணிகு யாழ். முற்றவெளி மைதானத் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் தலைமையில் நடைபெறும்.

கூட்டத்திற்கு திரு. பெர்னட்சொய்சா எம். பி., சரத்முத்தெட்டுகம, பி ஆனந்தசங்கரி, எஸ். நடராசா, ஆர். பாலுதேவன், எம். வி. சுப்பிரமணியம், எஸ். நாகராசா, எஸ். ஜெயசிங்கம், எஸ். ஆர். அருமைநாயகம், கே. ஐ. நாகராசன், எஸ். குசை ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஊர்வலம் பிற்பகல் 3 மணிக்கு நல்லூரிலிருந்து ஆரம்பமாகி மைதானத்தை வந்தடையும்.

இலங்கை சமசமாஜக் கட்சியின் ஊர்வலம் திருநெல்வேலி சந்தியிலிருந்து பி. ப. 3 மணிக்கு ஆரம்பமாகி கூட்ட மைதானத்தையடையும்.

பொதுச் சேவைத் தொழிலாளர் தொழிற் சங்க சம்மேளனத்தின் வட கிளையின் மேதினக்கூட்டம், இன்று மாலை 5-00 மணிக்கு, யாழ்ப்பாணம் தபாற்கந்தோருக்கு அருகாமையிலுள்ள மண்டபத்தில் திரு. அ. கந்தசாமி தலைமையில் நடைபெறும். திருவாளர்கள் பி. ஜே. எச். ஏ. வின்னராசா, எஸ். ஏ. ஆர். வேதநாயகம், மா. ஐயன்ன, க. செல்லத்துரை, அ. தம்பிராசா க. நவரத்தினம் ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மன்னார் மாவட்டத்தின் மே தினவிழா மன்னார் பட்டின சபை முன்றலில் இன்று மாலை 5-00 மணிக்கு நடைபெறும். பட்டின சபைத் தலைவர் திரு. எம். எஸ். ஏ. ரஹீம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் திருவாளர்கள் வி. ஏ. அழகக்கோன் எம். பி., சிதம்பரநாதன், எம். பி. எம். முகம்மது காசிம் ஆலிம், கே. எம். கே.சீனி ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள். ஊர்வலமொன்றும் நடைபெறும்.

## 1961–62-ம் ஆண்டில் 14,448 கூட்டுறவு சங்கங்கள்

### லாபம் ரூ. 1.78 கோடி; நஷ்டம் ரூ. 33 லட்சம்

கொழும்பு, வியாழன்

1961-62-ம் வருடம் 536 கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டதென்றும், இதில் 217 சங்கங்களின் பதிவு ரத்துச் செய்யப்பட்டதென்றும் இலங்கை கூட்டுறவு அபிவிருத்திக் கமிஷனரின் அறிக்கை கூறுகிறது.

கமிஷனின் 1961—62-ம் ஆண்டு அறிக்கையின்படி, அந்த ஆண்டு இறுதியில் மொத்தம் 14,448 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கியதாகக் கூறப்பட்டுள்ளது.

இதில் 8208 சங்கங்கள் 178 லட்சம் ரூபா லாபமடைந்தன. 3791 சங்கங்கள் 33 லட்சம் ரூபாய் நஷ்டமடைந்தன.

யாழ்ப்பாணம், மன்னார், வவனியா, மட்டக்களப்பு, திருக்கோணமலை உட்பட 9 இடங்களில் மாகாண, மாவட்ட கூட்டுறவு வங்கிகள் இயங்கின. யாழ்ப்பாண மாகாண கூட்டுறவு வங்கியின் இரு கிளைகள் சுன்னாகத்திலும், பரந்தனிலும் இயங்கின.

வடபகுதி விவசாய கூட்டுறவுச் சமாஜம் 1,21,554 அந்தர் வெங்காயமும், 327 அந்தர் மிளகாயும், 36657 அந்தர் நெல்லும், 670 அந்தர் தக்காளிப்பழமும், 1,56,832 ரூபாய் பெறுமதியான வாழைப்பழமும் விற்பனவு செய்ததின் மூலம், ரூ. 31472 லாபம் பெற்றது. யூனியனுக்குக் கிடைத்த நிகரலாபம் ரூபா 9000.

124 படுக்கைகள் கொண்ட மூளாயிலுள்ள கூட்டுறவு ஆஸ்பத்திரியில் 4528 உள்நோயாளர்களும் 54597 வெளிநோயாளர்களும் சிகிச்சைபெற்றனர். 12 படுக்கைகள் கொண்ட தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் 134 உள் நோயாளர்களும், 9985 வெளி நோயாளர்களும் சிகிச்சை பெற்றனர்.

## பந்த் ஞாபகார்த்த ஆஸ்பத்திரி

புதுடில்லி, ஏப். 30

காலஞ்சென்ற பண்டித கோவிந்தவல்லப பந்தின் ஞாபகார்த்தமாக 350 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி ஒன்றை பிரதமர் நேரு இன்று டில்லியில் திறந்துவைத்தார். 38 லட்சம் ரூபாய் செலவில் இந்த ஆஸ்பத்திரி அமைக்கப்பட்டது.

## 50 பேரே மாண்டனர்

டாக்கா, ஏப்ரல் 30

கிழக்கு பாகிஸ்தானில் 300 பேர் சென்ற படகு ஒன்று விபத்துக்குள்ளாகியதால் 50 பேர் மாண்டிருப்பதாக கடைசிச் செய்திகள் கூறுகின்றன. 250 பேர் மாண்டதாக முன்பு வந்த செய்திகள் கூறின. பெரும்பாலோர் மீட்கப்பட்டனர்.

## இதுவரை 3 லட்சம் அகதிகள்

புதுடில்லி, ஏப்ரல் 30

இதுவரை கிழக்கு பாகிஸ்தானிலிருந்து 2,99,000க்கு மேற்பட்ட அகதிகள் இந்தியா வந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## பெரிய அளவில் தமிழ் ஆசிரியர் நடத்துவர்

நல்லூர், வெள்ளி

தமிழாசிரியர் சம்பந்தப்பட்ட பல பிரச்னைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் மிகப் பெரிய அளவில் பதினொரு அம்சக்கோரிக்கைகள் கொண்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தவிருக்கின்றது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் இம்மாதம் 16-ந் திகதி நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் இலங்கையிலுள்ள ஏனைய தமிழாசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் திகதி மாற்றம் ஏற்படுமென எதிர் பார்க்கப்படுகிறது.

கடந்தவார இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வட இலங்கைத் தமிழாசிரியர் சங்க நிர்வாகக் கூட்டத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. ஏனைய தமிழாசிரியர் சங்கப் பிரதிநிதிகளுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலம் பற்றிப் பேச்சு நடத்தி அவர்களின் ஆதரவை சேருவதென முடிவு செய்யப்பட்டது.

சமவேலைக்குச் சம்பளம், போன்ற தமிழாசிரியர்களை எதிர்நோக்கியுள்ள பல முக்கிய பிரச்னைகளுக்குத் தீர்வு காண எடுக்கும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஆரம்ப நடவடிக்கையாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பதினொரு அம்சக் கோரிக்கைகளில் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றபின் நடைபெற்ற நியமனங்கள், மாற்றங்கள் சம்பந்தமாக விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டும்' என்ற கோரிக்கைக்கு அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் பூரணமாக ஆதரவு தெரிவித்துளளது. ஆனால் மற்றொரு ஆசிரியர் சங்கம் இந்த விஷயத்தில் கருத்து வேறுபாடு கொண்டுள்ளதாக அறியப்படுகிறது

கடந்தவார இறுதியில் நடைபெற்ற வட-இலங்கைத் தமிழாசிரியர் சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் கல்வி அறிக்கை பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டதாயினும் தீர்க்கமான முடிவு செய்வது பின்போடப்பட்டதாகத் தெரிகிறது.

தமிழாசிரியர் சங்கம் நடத்தும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் யாழ்ப்பாணத்திலுள்ள ஆசிரிய சங்க அலுவலகத்திலிருந்து புறப்பட்டு நகரத்தின் பல வீதிகளுக்கூடாக நகரமண்டபத்தை அடைந்து அங்கு பகிரங்கக் கூட்டம் நடத்தப்படும். சிங்கள ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் உரையாற்றுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஷேக் அப்துல்லா

புதுடில்லி, ஏப். 30

திரு. ஷேக் அப்துல்லா இன்று உப ஜனாதிபதி டாக்டர் ஸகிர் ஹூஸெய்னைச் சந்தித்து அவருடன் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

## மரக்கறி பயிரிட காணி அமைச்சு திட்டம்

கொழும்பு, வியாழன்

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மரக்கறி உற்பத்தியை அதிகரிக்கும் திட்டத்திற்கு தேசிய சிரமதான மூலம் வழிசெய்யும் திட்டம் ஒன்றைக் காணி அபிவிருத்தி அமைச்சு தயாரித்திருக்கிறது.

வீட்டுத் தோட்டங்களிலும், வெளியிடங்களிலும், பாடசாலைகளிலும் காய்கறிகளைப் பயிரிட செய்வதற்கான சிரத்தையை ஏற்படச் செய்ய இளைஞர்களின் சேவையைப் பயன்படுத்தும் அம்சம் இத்திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

காஷ்மீர்

## 'பாதுகாப்பு சபை மதிக்கப்பட வேண்டும்'

—யுதாண்ட்

புதுடில்லி, ஏப்ரல் 30

காஷ்மீர் பற்றி பாதுகாப்பு சபை பல சிபார்சுகளைச் செய்திருக்கிறதென்றும், இவைகள் கட்டளைகள் அல்லவாயினும் சம்பந்தப்பட்ட கட்சிகள் அவற்றை மதித்து நடப்பதையே தாம் விரும்புவதாயும் ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் கூறினார்.

## சீனாவில் சர்வாதிகாரம்

—பிராவ்டா

மாஸ்கோ, ஏப்ரல் 30

சீன அரசாங்கம் சர்வாதிகாரி ஒருவரினால் நடத்தப்படுவதாயும் அங்குள்ள கம்யூனிஸ்ட் மத்தியகமிட்டியும், தேசிய சபையும் அவரது கருத்தையே ஏற்று நடக்கிறதென்றும் பிராவ்டா பத்திரிகை குற்றஞ்சாட்டியது.

## "தமிழ்பேசும் தொழிலாளர் ஒன்று பட வேண்டும்"

### திரு. வி. என். நவரத்தினத்தின் மேதினச் செய்தி

நல்லூர், வெள்ளி

"தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகளைப் பெற போராட வேண்டிய சந்தர்ப்பத்தில் தமிழ்த்தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். தமிழ்ப்பேசும் தொழிலாளர்களின் ஒன்றுபட்ட சக்தி இன விடுதலைக்கு மிகவும் அவசியமாகும்" என்று சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் மேதினத்தை முன்னிட்டு விடுத்த செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தொழிலாளர் தினமான மே தினத்தில் தமிழ்ப்பேசும் தொழிலாளர்களுக்கு திரு. நவரத்தினம் விடுத்த செய்தியில் மேலும்தெரிவித்திருப்பதாவது:

தமிழ்த் தொழிலாளர்கள் தமது மொழியுரிமைக்காகப் போராடும் மொழி வழிபிரிந்த தொழிற் சங்கங்களில் சேர வேண்டும். தன்கையே தனக்குதவி என்பது போல எமது உரிமைகளைப் பெற நாமே முயற்சிக்கவேண்டும். பிறர் எமது உரிமைகளைப் பெற்றுத் தருவார்கள் என்று நாம் பேசாமல் இருக்கமுடியாது. கஷ்டப்பட்டுத்தான் நாம் சுபிட்ச வாழ்வையெய்தமுடியும்.

அரசியல், சமூக பொருளாதாரத் துறைகளில் நசுக்கப்படும் நாம் தியாகம், சேவை என்பனவற்றின் மூலம் முன்னேற்றம் காணவேண்டும். உரிமைகள் இழந்து அடிமைகளாக வாழ நாம் எவரும் விரும்பமாட்டோம். தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கு தம்மை அர்ப்பணிக்கும் எண்ணத்தை தமிழ்த் தொழிலாளர்கள் மத்தியில் மேதினம் உருவாக்க வேண்டும். தமிழ்த்தொழிலாளர்கள் ஒன்றுபட்ட சக்தி இனவிடுதலைக்கு வழி கோலட்டும். மொழி வழி பிரிந்த தொழிற் சங்கங்கள் தமது கடமைகளைச் செய்து இனத்தின் சுபிட்சத்திற்கு உழைக்க திடசங்கற்பம் செய்யவேண்டும்.

மணிவாக்கு

வாழ்க்கையிலே கடனாளியாக இராதே. கடன்பட்டிருத்தல் அமைதியின்மைக்கு வித்து.

— லாட்டு மகராஜ்

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு சித்திரை ௴ 19 உ (1-5-64)

## தொழிலாளர் தினம்

இன்று மே தினம். எல்லோரு ஓர் இனமென்ற தத்துவத்தைக்கொண்ட தொழிலாளர் ஐக்கிய தினம் இது. தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையை நிரூபிப்பதற்காக இத்தினம் சர்வதேச தொழிலாளர் தினமாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. இன்று நம் நாட்டிலும் மே தினம் கொண்டாடப்படுகிறது. ஆனல் தொழிலாளர்கள் மதம், மொழி, அரசியல் கட்சி முதலிய பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து பிளவுபட்டிருக்கிறார்கள். ஐக்கியப்படவேண்டிய தினத்தில் வேற்றுமைப்பட்டு விழாக் கொண்டாடுகின்றனர். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு" என்பது முதுமொழி.

நாளொன்றுக்குப் பதினறு மணித்தியாலத்துக்கு மேல் வேலைசெய்து அடிமைபோல் உழைத்துக் கொடுத்த தொழிலாளர் 1886-ம் ஆண்டில் ஒன்றுசேர்ந்ததன் பலனுசவே தான் இன்று எட்டுமணி நேர வேலையையும், இதர வசதிகளையும்தொழிலாளர் பெறுவதற்கு முடிந்தது. சிலர் தங்கள் சொந்த நலன்களுக்காக தொழிலாளர்களுக்குள் வேற்றுமையை ஏற்படுத்தி அதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தக்கூடும். இந்த அறிகுறிகள் இங்கு தென்படுகின்றன. இதற்கு இடம் கொடுக்காமல் இங்குள்ள தொழிலாளர் தமது சொந்தப் பலத்தில் நம்பிக்கைவைத்து ஐக்கியத்தை வளர்க்கவேண்டும். இல்லையேல் "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்" என்ற மேதின கோஷம் மாறி அதற்கு நேர்மாறுன நிலையேற்படலாம்.

சுதந்திரமடைந்து பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட போதிலும் நாடு எவ்வித முன்னேற்றமும் அடையாமலுள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்குநாள் பெருகிவருகிறது; வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளது; அத்தியாவசிய பொருட்களுக்குத் தட்டுப்பாடு; மக்கள் தங்கள் உணவுக்கும் உடைக்கும் பெரும் கஷ்டப்படுகின்றனர். இந்நிலையில்சமீபகாலத்தில் சில தொழிற்சங்கங்களும் சில அற்ப விஷயங்களுக்காகத் திடீர் வேலைநிறுத்தம் செய்து வந்துள்ளனர். இது வேலைநிறுத்தத்தின் மீதும் தொழிற்சங்கங்களின் மீதும் பொதுமக்களுக்குத் தவருன அபிப்பிராயத்தை ஏற்படுத்துவது இயல்பு.

பொதுமக்களின் நல்லெண்ணத்தையும், ஆதரவையும், அனுதாபத்தையும் பெற்றுல்தான் தொழிலாளர் தமது நியாயமான கோரிக்கைகளைப் பெறுவதற்கு நடத்தும் போராட்டங்களில் வெற்றி பெறமுடியும். பொதுஜன ஆதரவில்லாத எந்த இயக்கமும் வெற்றிபெறமுடியாது மக்கள் சமுதாயத்தில் ஒரு அங்கம் தொழிலாளர். எனவே தமது கஷ்டங்களையும், குறைகளையும் மட்டும் பெரிதாகக் கருதாமல் பொதுமக்களின் நிலையையும் எண்ணிப்பார்க்க வேண்டியது தொழிலாளர் கடமை. தொழிலாளரின் வேலைநிறுத்தத்தால் முதலாளியோ, அரசாங்கமோ மட்டும் நஷ்டமடைவார்களெனக் கருதகூடாது. எந்த வேலைநிறுத்தமும் பொதுமக்களை குறிப்பாக ஏழை, எளிய மக்களையே பாதிக்கும். ஆதலால் தொழிலாளி தனது உரிமைக்காகப் போராடும் அதேசமயத்தில் பொதுமக்களின் நலனையும், நாட்டின் நலனையும் கருத்தில்கொண்டு நாட்டுக்கும் பொதுமக்களுக்கும் செய்யவேண்டிய கடமைகளையும் சிந்தித்துச் செயலாற்றவேண்டியது அவர் தம் கடமை.

நாட்டின் இன்றைய நெருக்கடியான நிலையில் உற்பத்தியை அதிகரித்துப் பொருளாதாரத்தை அபிவிருத்திசெய்ய வேண்டியதுடன் நாட்டின் ஐக்கியத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பெரிதும் தொழிலாளர் கையில்தான் உள்ளது.

தொழிலாளரிடையே பிளவும், பிரிவினையும் இருப்பது அவர்களைப் பலவீனப்படுத்துவதாகும் ஒரு தொழிலில் பல "யூனியன்"கள் இருக்கச் செய்வதும் அவர்களைப் பலவீனப்படுத்தும் ஓர் ஏற்பாடுதான். இந்நிலை மாறவேண்டும். ஒரு தொழிலுக்கு ஒரு யூனியன் வேண்டுமென்ற கோரிக்கையை யாரும் கேட்காதது பெரிய குறை. தொழிலாளரின் நன்மையிலும், நாட்டின் முன்னேற்றத்திலும் அக்கறையுள்ளவர்கள் தொழிலாளர் சமூகத்திடையே ஒற்றுமையை வளர்க்கச்செய்வர். வரவரத் தொழிலாளர் விழித்துவருகின்றனர். தொழிலாளர் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கலாம். என்றுலும் அவர்கள் வேற்றுமையில் ஒற்றுமையைக் கண்டு, அவர்கள் பொதுநன்மையைக் கருதி எவ்வளவுதூரம் காரியம் செய்யமுடிகிறதோ, அவ்வளவுக்கு அவர்களது முன்னேற்றமும், நாட்டின் நன்மையும் அடங்கியிருக்கும்.

# இன்று நடைபெறும் மேதினக் கூட்டங்கள்

## அரசியல் நிலை; 21 கோரிக்கைகள் பற்றி தலைவர்கள் விளக்குவார்கள்

**நாட்டின் பலபகுதிகளிலும் இன்று மேதின விழா கொண்டாடப்படுகின்றது. இன்று நடைபெறும் மேதின விழா முக்கியத்துவம் வாய்ந்ததாகவிருக்கும் எனக்கருதப்படுகிறது. காலிமுக மைதானத்தில் நடைபெறும் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டத்தில் பல முக்கிய விபரங்கள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.**

பார்லிமெண்ட் ஒத்திவைக்கப்பட்டது முதல் இன்றுவரை நடைபெற்றுள்ள பல முக்கிய சம்பவங்களையும் இன்று ஐக்கிய இடதுசாரித் தலைவர்கள் எடுத்துக் கூறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இடதுசாரித் தலைவர்கள் இன்று காலிமுகத்திடலில் கூடுகின்றனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள நிதிநெருக்கடிகளையும் பொருளாதார நெருக்கடிகளையும் எந்த விதமாகத் தீர்த்துவைக்கலாம் என்பது குறித்து இடதுசாரித் தலைவர்கள் இன்று விளக்குவார்கள என நம்பபடுகிறது.

### இடதுசாரி ஐக்கியமுன்னணி

யின் மே தினக்கூட்டத்தில் பதினெரு தீர்மானங்கள் சமர்ப்பிக்கப்படும். இத்தீர்மானங்களில் பல விஷயங்கள் அடங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. இக்கூட்டத்தில் தீர்மானங்கள் சமர்ப்பிக்கப்படுவதுடன் மட்டுமின்றி பல கோரிக்கைகளும் எழுப்பப் படவிருக்கின்றன! வெளிநாட்டு வங்கிகளைத் தேசிய மயமாக்கவேண்டும் போன்ற கோரிக்கைகளும் இதில் அடங்கியுள்ளன.

தொழிற் சங்க இயக்கங்களினல் அங்கீகரிக்கப்பட்ட 21 கோரிக்கைகளையும் அமுல்செய்யக்கோரும் தீர்மானமொன்றும் இக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்

"ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தின் நடுவழிக் கொள்கையின் தோல்வியினல் தற்பொழுது இலங்கையில் அரசியல் நெருக்கடி உதயமாகியுள்ளது. இதன் விளைவாக நாட்டில் தற்பொழுது பொருளாதார நிதி நெருக்கடி நிலவுகின்றது. இந்த நெருக்கடிகளை சுமுகமாகத் தீர்க்கவேண்டுமென்ருல் இடதுசாரிகள் உடன்படிக்கையிலுள்ள கொள்கைகளை அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டும்" என்று இடதுசாரி ஐக்கிய முன்னணியின் அரசியல் தீர்மானமொன்று கூறுகின்றது.

இடதுசாரி ஐக்கிய முன்னணியின் தீர்மானங்களின் விபரம் வருமாறு:-

மற்றுமொரு உலக யுத்தத்தை தடுத்து தேசிய விடுதலைக்கும் சோஸலிஸ லட்சியத்துக்கும் போராடும் உலகிலுள்ள சகல மக்களுடன் சேர்ந்து போராட நாங்கள் தயாராகவிருக்கின்ரேம் என்பதைஇந்த மே தினக் கூட்டத்தை ஒழுங்கு செய்துள்ள இடதுசாரி ஐக்கிய முன்னணி தெரிவித்துக் கொள்கின்றது.

சரண்டலுக்கு எதிராகப் போராடும் முதலாளித்துவ நாடுகளின் மக்களுக்கும் சோஸலிஸ நாடுகளின் மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடதுசாரி ஐக்கிய முன்னணி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது. அண்மைக் காலத்தில் அரசியல் சுதந்திரமடைந்த ஆசிய, ஆபிரிக்க லத்தின் அமெரிக்க மக்களுக்கும் காலனி ஆதிக்கத்தை எதிர்த்து தமது அரசியல் சுதந்திரத்தைப் பெறுவதற்கு போராடிக்கொண்டிருக்கும் நாடுகளின் மக்களுக்கும் இடதுசாரி ஐக்கிய முன்னணி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது'

சகல அணு ஆயுத பரீட்சைகளும் தடைசெய்யப்படவேண்டுமென்றும் அணு ஆயுதங்கள் எல்லாம் அழிக்கப்படவேண்டுமென்றும் இககூட்டம் கோருகின்றது. இதுசம்பந்தப்பட்ட சகல தடுப்பு நடவடிககைகளுககும் இககூட்டம் தனது முழு ஆதரவையும் அளிககின்றது.

இவவருட அகடோபரில் கெய்ரோவில் இரண்டாவது மண்டல சார்பற்ற நாடுகளின் மகாநாட்டைக கூட்டுவதென்ற முடிவை இககூட்டம் வரவேற்கின்றது. காலனி ஆட்சியை ஒழித்து உலக சமாதானத்தை நிலைநாட்ட இம்மகாநாடு முயற்சிகள் எடுககுமென்று இககூட்டம் எதிர்பார்ககின்றது.

கியூபாவுககு எதிரான அமெரிககப் பயமுறுத்தல்களை இககூட்டம் வன்மையாகக கண்டிககின்றது. கியூபாவுடனை வர்த்தகத் தடைகளை அமெரிகக அரசாங்கம் விலககிக கொள்ளவேண்டுமென்றும் கியூபாமீது அமெரிககா தலையிடுவதைத் தவிர்த்துக கொள்ள வேண்டுமென்றும் இககூட்டம கோருகின்றது.

தேசிய ஆபிரிககர்களின் போராட்டத்துககு ஆதரவு கொடுத்து பாகுபாடு காட்டப்படும் கொள்கைகளை நாம்கண்டிககின்ரேம். சமஉரிமைகோரி போராடும் அமெரிகக நீகரோககளுககும் எமது ஆதரவைத் தெரிவித்துககொள்கின்ரேம்.

தென்வியட்னும், தென்கொரியா, லத்தீன், அமெரிக்கா, அங்கோலா மற்றும் ஏகாதிபத்திய ஆட்சியின் கீழிருக்கும் நாட்டு மககளின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு இக்கூட்டம் தனது ஒத்துழைப்பையும் ஆதரவையும் தருகின்றது.

### இலங்கையின் அரசியல் நெருக்கடி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தின் 'நடுவழிக்' கொள்கையினல் ஏற்பட்ட தோல்வி காரணமாகவேதான் இலங்கையில் தற்பொழுது அரசியல்நெருக்கடி ஏற்பட்டுள்ளது. என்பதை இம்மேதினக் கூட்டம் அறிவிக்கின்றது. இடதுசாரி ஐக்கிய முன்னணி வகுத்துள்ள உடன்படிக்கையிலுள்ள கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் ஓர் அரசாங்கத்தை நிறுவுவதன் மூலம் தற்போதைய நெருக்கடிகளைத் தீர்த்து வைக்கலாமென்று இக்கூட்டம் யோசனை கூறுகின்றது.

இடதுசாரி ஐக்கிய முன்னணியின் ஒத்துழைப்புடன் தற்போதைய நெருக்கடிகளைத் தீர்த்துவைக்கலாம் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவர்கள் கருதுவதை இக்கூட்டம் வரவேற்கின்றது. இக்குறிக்கோளை அடைவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ளவர்கள், தங்களது கட்சிக்குள்ளிருக்கும் வலது சாரி பிற்போக்கு சக்திகளை முறியடிக்க வேண்டும்.

### அமெரிக்க 7-வது கப்பற்படை

இந்து மகா சமுத்திரத்துக்குள் அமெரிக்க ஏழாவது கப்பற்படை நுழைவதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன் தனது முழு எதிர்ப்பையும் தெரிவிக்கின்றது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கை, இலங்கை உள்ளிட்டு பல நாடுகளின் சுதந்திரத்துக்கும் பாதுகாப்புக்கும் ஒரு பயமுறுத்தலாக இருக்கிறது.

இந்துமகா சமுத்திரத்திலிருந்து அமெரிக்க 7-வது கப்பற்படை உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும் என்றும் இந்து மகாசமுத்திரப் பகுதி அணு ஆயுதங்களற்ற ஒரு பகுதியாக பிரகடனப்படுத்தப்பட வேண்டுமென்றும் இக்கூட்டம் கோருகின்றது.

### விலை உயர்வு

பொதுமக்களின் அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் பற்றுக்குறையை நீகி இப்பொருள்களின் விலை உயர்வைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இக்கூட்டம் கோருகின்றது.

பொதுமக்களுக்குத்

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

இந்திய பாடசாலை மாணவர் கிரிக்கெட் கோஷ்டியினர் இப்போது யாழ்ப்பாணம் வந்துள்ளனர். நேற்றும் இன்றும் இங்கு விளையாடுகிருர்கள். இங்குள்ள பொதுமக்கள் சார்பாகவும் சிறப்பாக மாணவர் சார்பிலும் அவர்களுக்கு நல்வரவு கூறுகின்றேன்.

இப்போது இந்தியாவிலிருந்து இங்கு வருவதும் இங்கிருந்து இந்தியா செல்வதும் குதிரைக்கொம்பாகியுள்ளது. இருகரப்பிலும் அதிக கெடுபிடிகள் உள்ள இச்சமயத்தில் இந்தியாவிலிருந்து மாணவர் கிரிக்கெட் வீரர்கள் வரமுடிந்தது பெரியகாரியம்.

* * *

கொழும்பிலே இந்திய மாணவர் கோஷ்டிக்கும், இலங்கை மாணவர் கோஷ்டிக்கும் நடந்த கிரிக்கெட் பந்தயத்தைப் பார்க்க ஒருசிலரே சென்றிருந்தனராம். ஓர் ஆங்கில சகவர்த்தமானியிலே ஓரன்பர் இதற்காக வருந்தி எழுதியுள்ளார். இலங்கையிலே கிரிக்கெட் கிளப்புகள் சாதி, இன, மதவேறுபாடுகளாகவும், கல்லூரிகளின் பெயரிலும் பிரிந்து பிளவுபட்டிருப்பதாயும், ஒரு தேசிய அமைப்பின்மீது இதை ஒன்றுபடுத்தவேண்டுமெனறுங் கூறுகிருர். மிக நல்ல யோசனை.

இங்கு யாழ்ப்பாணத்திலே கிரிக்கெட்டின் பெயரால், பலகாலமாக பல கல்லூரிகளுக்குள்ளும் உள்ளூர போட்டி பொருமைகள். இது பகிரங்க ரகசியம். முன்னர் எப்படியாயினும், இப்போது விளையாட்டுகள்மூலம் மாணவர் சமூகத்திடையே ஒற்றுமையையும் பரஸ்பர நல்லுறவையும் ஏற்படுதத வேண்டும். அதற்கான முறையில் தக்க திருத்தங்களைச் செய்யவேண்டிய சமயம் வந்துவிட்டது.

* * *

ஓரன்பர் வந்தார். வீட்டின் முன்புறத்தைக் கண்டதும், "இதைஏன் சும்மா போட்டிருக்கிறீர்கள். இங்கு காய் கறி செடிகளைப் போடலாமே. சுவரோரம் அகத்தி, தவசி முருங்கை இவற்றை வைத்தால் வருடம் முழுவதும் அது பலன்கொடுக்கும். காய்கறிகளை விலைகொடுத்து வாங்கத் தேவையில்லை........" என்று நீண்ட 'லெக்சர்' கொடுத்தார்.

முன் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திலே வீட்டுக்குவீடு கொடித்திராட்சைப்பழம் குலை குலையாகத் தொங்குமாம். ஆனல் அவ்வித திராட்சை வீட்டில் இருப்பது வீட்டுக்கு ஆகாது என்று ஒரு வீண் வதந்தியைப் பரப்பிவிட்டதால், இப்போது ஒரு வீட்டிலும் திராட்சையே இல்லாமற் போய்விட்டதென்றும், அதை மீண்டும் வீட்டிலே உற்பத்தி செய்யவேண்டுமென்றும் சொன்னர்

அன்று ஒருநாள் யாழ்ப்பாணத்திலே ஒரு கடையில் திராட்சைக்குலை இரண்டொன்று தொங்கியது. விலை என்ன என்று நண்பர் கேட்டதற்கு ராத்தல் எட்டுருபாய் என்று கூறினர்! அதுவும் புளிப்பாம்!

திராட்சையும் ஆப்பிளும் இறக்குமதிசெய்ய முடியாமல், தீர்வைத்தடைகள் போடப்பட்டுள்ளன. நுவரேலியாவிலே நல்ல ஆப்பிள்களை உற்பத்தி செய்கிருர்களாம். யாழ்ப்பாணத்திலே கொடித்திராட்சை நன்ருக உற்பத்தியாகுமென்றும், அதில் நல்ல ஆதாயமுமிருப்பதாயும் அன்பர் தெரிவித்தார். திராட்சையால் வீட்டுக்கு எவ்வித தீங்கும் ஏற்பட்டுவிடாது. நாம் யாருக்காவது தீங்குசெய்தால்தான் நமக்குத் தீங்குவிளையும். ஆகவே இங்கு வீண் பீதிகளை விட்டு மீண்டும் யாழ்ப்பாணத்தில் திராட்சையைப் பயிர்செய்பவர்கள் இலவசமாகப் பழங்கள் பெறுவதுடன் நல்ல ஆதாயமுமடையலாம்.

* * *

ஓரன்பருக்கு ஏதோ விஷப் பூச்சி கடித்து, கால் திடீரென

(5-ம் பக்கம் பார்க்க)

# நேரு-ஷேக் அப்துல்லா 45 நிமிடப் பேச்சு

## காந்தி சமாதிக்கும் சென்றார்

புதுடில்லி, ஏப். 30

நேற்று புதுடில்லி வந்து சேர்ந்த முன்னாள் காஷ்மீர் பிரதமர் ஷேக் அப்துல்லாவை ஸ்ரீமதி இந்திராகாந்தியும், ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயணனும் விமானநிலையத்தில் வரவேற்றனர்.

நல்லெண்ணத்தை நாடியே தாம் இந்தியா வந்திருப்பதாய் ஷேக்அப்துல்லா அப்போது கூறினார். நேருவின் விருந்தினராகத் தங்கியிருக்கும் அப்துல்லா, பிரதமரின் மாளிகையிலுள்ள வரவேற்பறையில் திரு. நேருவினால் வரவேற்கப்பட்டார். இருவரும் தேநீர் அருந்தியவுடன் அவர் 45 நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பின் ராஜ்காட்டில் காந்தி சமாதிக்கும், மௌலானா அபுல் கலாம் அஸாதின் சமாதிக்கும் சென்று திரு. அப்துல்லா அஞ்சலிசெலுத்தினர்.

மாலையில் ஜனாதிபதி ராதாகிருஷ்ணனை அவர் சந்தித்தார்.

# "பலாத்காரத்தைக் கைவிடுக"

## சைப்ரஸ் தலைவர்களுக்கு யுதாண்ட் வேண்டுகோள்

பாரிஸ், ஏப். 30

பலாத்காரததைச் கைவிடும்படி தமது சமூகத்தினரிடம் விண்ணப்பிக்குமாறு சைப்ரஸின் இரு கட்சிகளையும் யுதாண்ட் கேட்டுக்கொண்டிருக்கிறார். யுதாண்ட் தமது விண்ணப்பத்தை ஜனாதிபதி மக்காரியோஸுக்கும், உப ஜனாதிபதி டாக்டர் குட்ஷுக்குச்கும் அனுப்பியிருக்கிறார்.

சைப்ரஸில் தமது சொந்தப் பிரதிநிதியாக உயர்தர அரசியல் அதிகாரி ஒருவரை நியமித்திருப்பதாயும் யுதாண்ட் தெரிவித்திருக்கிறார்.

ஐ. நா. படைத் தளபதி ஜெரனல் கியானி, ஐ. நா. மத்தியஸ்தர் ஆகியோரின் திறமையில் தமக்குப் பூரண நம்பிக்கை உண்டென்றும் தலைமைக் காரியதரிசி கூறினர்.

ஜெனரல் கியானி நேற்று உப ஜனாதிபதி குட்ஷுக்சைச் சந்தித்துவிட்டு வெளியேறும்போது பெருந்தொகையான கிரேக்கர்கள் அவருக்கெதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

# "காஷ்மீர் இணைப்பு பற்றி அப்துல்லாவுடன் பேசமுடியாது"

## நிதி மந்திரி டி. டி. கே. பேச்சு

புதுடில்லி, ஏப்ரல் 30

காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்தது முடிவான விஷயம் என்றும், இந்த சரித்திர உண்மை பற்றி ஷேக் அப்துல்லாவுடன் விவாதிப்பதில்லை என்றும் இவ் விஷயத்தில் இரண்டாவது முடிவு எதுவுமே கிடையாது என்றும் நிதி மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறினர்.

காஷ்மீரின் தற்போதைய ஸ்திரமான நிலைமைக்கு ஷேக் அப்துல்லா உதவி செய்வதானால், அரசாங்கம் அவரது உதவியை ஏற்றுக் கொள்ளும் என்றும் திரு. கிருஷ்ணமாச்சாரி கூறினர்.

"இந்திய ராணுவம் காஷ்மீருக்குள் புகுவதற்கு முன்பே காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்து விட்டது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். கடந்த 15 ஆண்டுகளாக அது இந்தியாவின் பகுதியாக இருந்து வருகிறது. ஐந்தாண்டுத் திட்டங்களில் காஷ்மீர் இடம் பெற்று வருகிறது. காஷ்மீரை எதிரிகளின் படையெடுப்பிலிருந்து காப்பதற்காக இந்திய ராணுவம் உயிர்த் தியாகம் செய்தது. காஷ்மீருக்காக நமது இளம் வீரர்கள் போரிட்டபோது தாய் நாட்டைக் காக்கவே தாம் உயிரை விடுவதாய்க் கருதி சண்டையிட்டார்கள். எனவே இணைப்பு முடிவை மாற்றுவது பெருங் குற்றம் மட்டுமின்றி, நமது வீரர்களின் உயிரை அனாவசியமாகப் பலியிட்டதாகவும் முடியும்" என்றும் நிதிமந்திரி குறிப்பிட்டார்.

---

## 'தென்ரொடீஷியா வேண்டாம்'

நைரோபி, ஏப். 30

கென்யாவின் ஆளும் கட்சியான கென்யா ஆபிரிக்க தசிய யூனியனின் பிரதம கொறடா திரு. ஜே. டி. காளி விடுத்துள்ள அறிக்கையில், காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டுக்கு தென்ரொடீஷியா அழைக்கப்பட்டால், கிழக்காபிரிக்கத் தலைவர்கள் மகாநாட்டைப் பகிஷ்கரிக்க வேண்டுமெனக் கேட்டிருக்கிறார்.

## சூடான் அதிபர் இந்தியா வருவார்

புதுடில்லி, ஏப். 30

வருகிற மே 20-ந் திகதி சூடான் அதிபர் இந்தியா வருவாரென்றும், நாட்டில் ஐந்து தினங்கள் அவர் சுற்றுப்பிரயாணம் செய்வாரென்றும் அறிவிக்கப்பட்டது.

---

## பாக்.—ஆப்கான் எல்லையில் கைகலப்பு

புதுடில்லி, ஏப். 30

பாகிஸ்தான் — ஆப்கானிஸ்தான் எல்லையில் மலைவாசிவாசிகளுக்கும், பாகிஸ்தான் துருப்புகளுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டிருப்பதாயும், நிலைமை அங்கு குழப்பமாய் இருப்பதாயும் 'காபுல் டைம்ஸ்' பத்திரிகை கூறுகிறது.

தெற்கு பாகிஸ்தானிலிருந்து கிடைத்த ஒரு செய்தியை இப்பத்திரிகை பிரசுரித்திருக்கிறது. பலூச் மலைவாசிகளும், பாகிஸ்தானிய துருப்புக்களும் இன்னும் கைகலப்பில் ஈடுபட்டிருப்பதாயும், பாகிஸ்தான் ராணுவமும், பொலிசும் கேர்னல் இக்பால் தலைமையில் மலைவாசிகளுக்கெதிராகப் போராடி வருகிறதென்றும் அறிவிக்கப்படுகிறது. கிராமங்களிலும், மலைவாசிகளின் வாசஸ்தலங்களிலும் பாகிஸ்தான் துருப்புக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக அறிவிக்கப்படுகிறது.

---

புதுடில்லி, ஏப். 30

காஷ்மீர் பற்றிய இந்தியாவின் நிலையை விளக்கும் பொருட்டு இந்தியா, இரு தூது கோஷ்டிகளைவெளிநாடுகளுக்கு அனுப்பியிருக்கிறது.

ரஷ்யா:

## உலகில் பெரும் எண்ணெய் நாடு!

மாஸ்கோ, ஏப். 30

இன்னும் சில வருடங்களில் ரஷ்யா உலகிலேயே அதிக எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடாக விளங்கும் இவ்வாண்டு சைபீரியாவில் ஏராளமான எண்ணெய் வயல்கள் பயன்படுத்திக் கொள்ளப்படும் என்றும், ரஷ்யாவின் எண்ணெய் உற்பத்தி வருடம் 2 கோடி டன் வீதம் அதிகரித்துவருகிறதென்றும் கூறப்படுகிறது. 1964-ம் ஆண்டு 22 கோடி டன் எண்ணெய் ரஷ்யா உற்பத்தி செய்யவிருக்கிறது. 1970-ம் ஆண்டில் இது மேலும் 67 சதவி கிதம் அதிகரிக்கும்.

---

## அழகிகளுக்கு ஆபத்து

ஜாகர்த்தா, ஏப். 30

இந்தோனேஷியாவின் ஆதிக்கத்திலுள்ள ரியோதீவில் உளவறிவதற்காக அனுப்பபட்ட 50 மலேஷிய அழகிகள் கைது செய்யப்பட்டதாயும், அரசாங்க அதிகாரிகளிடமிருந்து இவர்கள் தகவல் பெற முயன்றதாயும் கூறப்படுகிறது.

---

## பிலிப்பைன்ஸ் வெளிநாட்டு மந்திரி

டோக்கியோ, ஏப். 30

ஜப்பானிலுள்ள பிலிப்பைன்ஸ ஸ்தானிகர் திரு. மாரோ மென்டஸ், பிலிப்பைன்ஸ் வெளிநாட்டு மந்திரி பதவியை ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

---

## ராஜகுடும்ப செய்திகள்

லண்டன், ஏப். 30

கென்ட் கோமகள் பெண் குழந்தை ஒன்றைப் பிரசவித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஹாலந்து இளவரசி ஜரீனும் அவரது காதலர் ஹியூகோ இளவரசரும் வத்திக்கானில் தங்கள் திருமணத்தை முன்விட்டு ரோமாபுரி சென்றனர்.

---

## நேருவுக்கு பூமா நன்றி

வியண்டயன், ஏப். 30

லாவோஸ் நெருக்கடியான சமயத்தின் போது இந்தியா அளிதத உதவிகளுக்காக இளவரசர் சவர்ணபூமா, பிரதமர் நேருவுக்கு நன்றிதெரிவித்திருக்கிறார்.

## 48 பேருக்கு வீரவிருதுகள்

புதுடில்லி, ஏப்ரல் 30

சீனப்படையெடுப்பின்போது லடாக்கில் வீரச்செயல் புரிந்த 48 பேருக்கு ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் நேற்றுவிருதுகளை வழங்கினர். இதில் 23 பேர் சண்டையில் மாண்டவர்களாகும். விருதுபெற்றவர்களில் 8 பேர் சிவிலியன்கள்.

---

## ராஜன்பாபு உருவப்படம்

புதுடில்லி, ஏப்ரல் 30

முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திரபிரசாத்தின் உருவப்படம் ஒன்றை வருகிற மே 5-ம் திகதி பார்லிமெண்ட் மத்திய மண்டபத்தில் ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் திறந்து வைப்பார்.

---

## பிஜிதீவில் 80,000 இந்தியர் கஷ்டம்

ஸூவா (பிஜி), ஏப்ரல் 30

பிஜிதீவில் 80,000 இந்தியர்கள் பாதுகாப்பற்ற நிலையில் கஷ்டப்படுவதால் அவர்கள் வெளியேறவேண்டிய நிலையில் இருப்பதாக பிஜிகியான் சங்கம் (இந்தியக் கரும்புச் சாகுபடியாளர் சங்கம்) யுதாண்டுக்குச் செய்தி அனுப்பியிருக்கிறது.

# படகு விபத்தில் 250பேர் பலி!

டாக்கா, ஏப்ரல் 30

கிழக்கு பாகிஸ்தானில் டாக்காவிலிருந்து 30 மைல் தூரத்திலுள்ள சான்பூர் கிராமத்திற்கருகே படகு, ஒன்று மூழ்கியதால் குறைந்தது 250 பேர் மூழ்கி மாண்டதாக அறிவிக்கப்படுகிறது.

# 'கேரள தேர்தலில் காங்கிரஸுக்கே வெற்றி'

## முதன் மந்திரி நம்பிக்கை

புதுடில்லி, ஏப். 30

"சில காங்கிரஸ் காரர்கள் ஆதாரமற்ற கதைகளைக் கட்டிவிட்டு அதன் மூலம் கட்சிக்குப் பெரும் பாதகம் ஏற்படுத்தி வந்தாலும் கூட கேரளாவில் இப்போது ஒரு அரசாங்கம் இயங்கி வருகிறது. எப்போதையும் போல் சுமுகமாகவும் நிர்வாகம் நடத்தி வருகிறது" என முதன் மந்திரி திரு. சங்கர் ஒரு பேட்டியில் கூறினர்.

கேரளாவில் அடுத்த வருடம் நடக்க விருக்கும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெறும் என்றும் திரு. சங்கர் கூறினர்.

கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு ஏற்படடுள்ளதையும் மற்றக் கட்சிகளின் பலவீனமான நிலையையும் அவர் சுட்டிக் காட்டினர்.

கேரள ராஜ்ய சட்ட சபையிலிருந்து ராஜினமாச் செய்ய பல காங்கிரஸ எம். எல். ஏக்கள் மேலிட அனுமதியைக் கோரமுற்பட்டுள்ளதாக வந்த செய்தி உண்மையல்ல என்றும் திரு. சங்கர் கூறினர்.

"சங்கடமான நிலைமை ஒன்று ஏற்பட்டு மந்திரி சபையிலிருந்து ஒரு மந்திரியை வெளியே அனுப்ப நேரிட்டது. அந்த விஷயம் அத்தோடு முடிந்து விட்டது. ராஜ்ய காங்கிரஸ் தலைமையுடன் சிலதனிப்பட்ட நபர்கள் கருத்து வேற்றுமை கொண்டிருந்தாலும் ராஜ்யத்தில் போட்டி காங்கிரஸ் அமைப்பு ஒன்றும் ஏற்படவில்லை.

என்றாலும் கூட கோரள காங்கிரஸில் அடிப்படைக் கோளாறு ஏதோ உள்ளது. சில காங்கிரஸ் காரர்களுக்கு கட்சியை விட வேறு விஷயங்களில் அதிக விஸ்வாசம் உள்ளது. ஒவ்வொருவரும் உண்மையான காங்கிரஸ்காரராக இருந்து அனைவரும் ஒன்றுபட்டுநின்றால் வருகிற பொதுத் தேர்தல் குறித்து காங்கிரஸ் கட்சி கவலைபபடவேண்டியதில்லை" என்றும் சங்கர் கூறினர்.

---

## ஹிந்தி பல்கலைக்கழகம்

புதுடில்லி, ஏப்ரல் 30

ஹிந்தியைப் பாடமொழியாககொண்ட பல்கலைக் கழகம் ஒன்றை தென்னிந்தியாவில் அமைப்பதுபற்றி, தென்ராஜ்யங்கள் தெரிவிக்கும் யோசனையைப் பரிவுடன் பரிசீலனை செய்யத் தயாராய்இருப்பதாக கல்வி மந்திரி திரு. சக்ளா கூறினர்.

---

## பிரிட்டனுக்கு இந்தியா குறிப்பு

புதுடில்லி, ஏப். 30

தென்ரொடீஷியாவில் கைது செய்யப்பட்டிருக்கும் தேசியத் தலைவர் திரு. ஜொஷுவோ நிக்கோமாவை விடுதலைசெய்ய நடவடிக்கைளடுக்கும்படி கேட்டுக்கொள்ளும்குறிப்பொன்றை இந்திய அரசாங்கம், டில்லியிலுள்ள பிரிட்டிஷ் தூதர்மூலம் சமர்ப்பித்திருக்கிறது.

---

## டச்சு அரசிக்கு வாழ்த்து

புதுடில்லி, ஏப்ரல் 30

டச்சு அரசி ஜூலியானாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் அவருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

## "செண்டோ" வெளி மந்திரிகள்

வாஷிங்டன், ஏப். 30

"செண்டோ" ராணுவக் கூட்டுமகாநாட்டில் கலந்து கொண்ட பாகிஸ்தான், ஈரான், பிரிட்டன், துருக்கி ஆகிய நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகள், அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. டீன்றஸ்குடன் ஜனாதிபதி ஜோன்ஸனைச் சந்தித்தனர்.

---

## சிங்கியாங் குழப்பம்

பீகிங், ஏப். 30

சீனவிலுள்ள சிங்கியாங் மாகாணததில் குழப்பம் ஏற்பட்டிருப்பதாயும் இதன் விளைவாக ஒருதொகையான சிறுபான்மைத் தலைவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

---

## சீன - ரஷ்ய மேதின கெடுபிடி

பீகிங், ஏப. 30

பீகிங் மேதினக்கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள தொழிலாளர்களை அனுப ரஷ்யா மறுத்துவிட்டது என பீகிங் ரேடியோ குற்றஞ்சாட்டியது.

---

மத்திய மாகாண

## சைவ மகாசபா உத்தியோகத்தர்கள்

கொழும்பு, வியாழன்

மத்திய மாகாண சைவ மகா சபையின் 38-வது ஆண்டு விழா கூட்டத்தின்போது பின்வரும் உத்தியோகத்தர்கள் நடப்பு வருடத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தா, முதலியார் ஈ. கனகநாயகம், முதலியார் கே. வி. இரங்கநாதன், திரு. எஸ். தம்பித்துரை, திரு. போ. பாலசிங்கம், திரு. ரி. வி. இராமகிருஷ்ணராவ், திரு. எஸ். பி. வைத்திலிங்கம், திரு. எம். துரைசாமிப்பிள்ளை, தலைவர் கலாநிதி சு. வித்தியானந்தன். உபதலைவர்கள்: திருவாளர்கள் மா. ஆனந்தர், ஈ. காசிலிங்கம், வி. ரி. செல்லத்துரை, கே. எம். தியாகராசா, வே. திருநாவுக்கரசு. பொதுக்காரியதரிசிகள்: திருவாளர்கள் சி. செ. இலங்கையர், மு. சதாசிவமூர்த்தி. பொதுத் தனாதிகாரி: திரு. மா. கனகராசா. உபதனாதிகாரிகள்: திருவாளர்கள் கு. பரமசிவம், ரி. குலவீரசிங்கம், க. நடேசபிள்ளை.

சமுதாயக்குழுத் தலைவர்: திரு. கே. எம். சிவஞானம், சமுதாயக்குழுத் தனாதிகாரி: திரு. மு. சிவபாதம். கட்டிடத் தலைவர்: திரு. கே. சண்முகம், கல்விக்கழகக் காரியதரிசி: திரு. நா. மகாலிங்கம்.

நிர்வாகசபை அங்கத்தினர்கள்: திருவாளர்கள் மு. சச்சிதானந்தம், சி. கிருஷ்ணபிள்ளை, கே. தியாகராசா, ப. சின்னையா, கே. கந்தையா, எஸ். பஞ்சாட்சரம், ஏ. விவேகானந்தன், எஸ். துரைசாமிப்பிள்ளை, க. முருகேசு, பெ. சண்முகம், எஸ். சிவபாதம், வி. பாலசுப்பிரமணியம்.

# “ஒன்றுபட்டாலே உரிமைகளை பெறமுடியும்”

## பாஷையூர் கூட்டத்தில் மேயர் துரைராசா பேச்சு

நல்லூர், வியாழன்

‘உலகின் பல நாடுகளுக்கும் சென்ற தமிழ் பேசும் மக்கள் இன்று தமது சொந்த நாட்டில் கள்ளத்தோணிகளாகக் கருதப்படுகிறார்கள். கண்ட இடங்களில் கைது செய்யப்பட்டு அல்லற் படுத்தப்படுகிறார்கள். இந்த நாட்டில் ஒரே இனமே வாழவேண்டும் என்று விரும்பும் பெரும்பான்மையினர் கூட கள்ளத்தோணிகளில் வந்தவர்களே’ என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பாஷையூரில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் சொன்னார்.

பாஷையூர் துறைமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள ‘அழகையா முத்தமிழ் அரங்கு’த் திறப்பு விழா வைபவத்தில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசியதாவது:-

சிங்கள மக்களின் இதிகாசமான மகாவம்சம் என்னும் நூல் சிங்கள மக்களின் முன்னோர்களான விஜயனும் அவனது நண்பர்களும் கள்ளத்தோணிகளாகவே இலங்கை வந்த சம்பவத்தை விவரிக்கின்றது. இலங்கையைத் தமிழ் மன்னர்களும் ஆண்டதனைச் சரித்திரம் சொல்லும். பழம் பெருமை மிக்க நாம் இந்நாட்டில் எல்லா வகையாலும் நசுக்கப்படுகிறோம். அரசியல் பொருளாதார உரிமைகள் பறிக்கப்பட்டு விட்டன. என்றும் நாம் அடிமைகளாகவாழப் போவதில்லை. நமது உரிமைகள் பெறும்காலம் வெகுவிரைவில் உண்டு.

### பொருளாதார அபிவிருத்தி

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

தற்போதைய அரசியல் கலக்கமானதாக உள்ளது. கலக்கத்தின் இறுதியில் விடிவு ஏற்படுவதனைத் தடுக்க முடியாது. அரசாங்கம் இடதுசாரியினருடன் கூட்டுச்சேர்வதினுலோ, தமிழரசுக்கட்சியுடன் நடத்தப்படும் பேச்சு வார்த்தையினுலோ எமக்கு விடுதலை கிடைக்காதா என்று ஏங்குகிறார்கள்.

ஆண்டவன் சித்தம் எதுவோ அதுதான் நடக்க முடியும். சோதனைகள் பல நமக்குத் தரப்படலாம். விடுதலைக்குக் காலம் வரும்வரை நாம்பொறுத்துத் தான் ஆக வேண்டும்.

அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் எமது கடமைகளைச் செய்ய வேண்டும். உற்பத்தி அபிவிருத்திக்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். வாழ்க்கைச் செலவு அதிகரித்து வரும் இந்த நாளில் நமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். தேவையற்ற செலவுகளை நீக்க வழிகாண வேண்டும். கரையோரப்பகுதி மக்களின் கையில் பொருளாதார அபிவிருத்தி பெரிதும் தங்கியுள்ளது.

விழாவிற்கு தலைமை வகித்துப் பேசுகையில் மேயர் திரு. டி. எஸ். துரைராஜா கூறியதாவது:-

தமிழ் பேசும் மக்களின் முன்னேற்றத்திற்காக உழைப்பவர்களுக்குரிய மதிப்பை அளிக்க நாம் தவறுகிறோம். இதனால் தான் நாம் உயர்வடையாமல் இருக்க நேரிட்டுள்ளது. தியாகம் செய்பவர்களை நாம் போற்ற வேண்டும். தேச, சமய, சமூகத் தொண்டர்களுக்கு உதவிபுரிய ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். பிற்போக்கான நிலைமையில் நாம் தொடர்ந்தும் போய்க் கொண்டிருப்போமானுல் நாடு என்னுகும் என்பதனை நினைக்கவே முடியாது!

மக்கள் ஒன்றுபடாமல் உரிமைகளைப் பெற்றுவிட முடியாது. தனிப்பட்ட குரோத மனப்பான்மைகளை அகற்றி உரிமைப் போரில் குதிக்க வேண்டும். நன்மை செய்பவர்கள் செய்ததனை நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். உண்மையை உண்மையாகவும், பொய்யை பொய் எனவும் ஒப்புக்கொள்ள வேண்டும். உண்மைகளைத் திரித்துக்கூறி மக்கள் மனத்தில் தவறுன அபிப்பிராயத்தை ஏற்படுத்தக் கூடாது.

முன்னுள் செனட்டர் திரு. ஜி. நல்லையா பேசியதாவது:

தமிழ் மக்கள் மத்தியிலும் முன்னேற்றமடையாத மக்கள் இருக்கிறார்கள். அவர்களையும் முன்னேற்ற முயற்சி எடுக்க வேண்டும். மக்கள் ஒன்றுபட வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டு விட்டது. நமக்குள் உள்ள பிரிவினைகளை அகற்றி ஒன்றுபட்ட சக்தியை உலகுக்கு உணர்த்த வேண்டும். முன்னேற்றமடையாத மக்கள் முன்னேற்றப் பாதையில் செலுத்த ஏனையவர்கள் முயற்சிப்பதில் கௌரவக்குறைவு எதுவுமில்லை.

உதவி மேயர் திரு. ஜே.எஸ் அழகையா பேசியதாவது:

நமக்கு நாடு என்ன செய்தது என்று கேட்பதனைவிட நாட்டுக்கு நாம் என்ன செய்தோம் என்பதனை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். குறுகியகால வாழ்க்கையில், வாழ்க்கையின் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

நமக்குள் பிளவுகள் இருக்கலாம். நாம்பிறப்பதற்கு முன்பே இப்பிளவு மனப்பான்மை தோன்றி விட்டது. வளர்ந்து வரும் இம்மனப்பான்மையைக் கண்டு நாம் கவலைப்படாமலிருக்க முடியாது. ஆனுல் இந்த மனப்பான்மையை குரோதமின்றி கருமங்களைச்செய்வதன் மூலம் நாம் போக்கடிக்கமுடியும். தனிமனிதன் ஒருவனுக்குக் கௌரவமளிப்பதைவிட அவனது தியாகச் செயல்களுக்கு மக்கள் மதிப்பளிப்பது சிறந்தது. இதனுல் தியாகம்செய்பவன் மேலும் பல செயல்களைச் சாதிக்கக்கூடியாதாக இருக்கும்.

திரு. ஆ. துரைராஜசிங்கம் பேசுகையில், பாஷையூர் மக்கள் தமக்குத் தொண்டுசெய்யும் ஒருவர் பெயரில் அரங்கம் நிறுவித் தமது நன்றிக்கடனைச் செலுத்தியுள்ளார்கள் என்று குறிப்பிட்டார்.

வழக்கறிஞர் திரு. எஸ். மகாதேவா பேசுகையில், திரு. அழகையாவின் குணநலன்களைப் பாராட்டிப் பேசினார்.

மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

“நீரும், நிலவும், காற்றும் தோன்றிய காலந்தொட்டே தமிழ் நிலைத்துள்ளது. உலகின் பல மொழிகள் காலக்கிரமத்தில் அழிந்துவிட்டன. கடற்கோள்கள், பிறநாட்டினர் படையெடுப்பு, இயற்கைப் போராட்டம் என்பனவெல்லாம் ஏற்பட்டுங்கூட தமிழ் அழிந்துவிடவில்லை, காரணம் அது வளம்மிக்க மொழியாக இருப்பதுதான்.

தமிழராகப் பிறந்துவிட்டதால் பெருமைப்படவேண்டிய நாம் சிங்களத்தைப் படிக்கப் பெற்றோரால் வற்புறுத்தப் படுகிறோம். பெரியோர்கள் தமது பிள்ளைகளுக்குத் தேடி வைத்துவிட்டுப் போவதென்று சொல்வார்கள். அவர்கள் சிங்களத்தைப் படியென்று வற்புறுத்தி அவர்களை நாளடைவில் சிங்களவர்களாக மாற்ற முயற்சிப்பதுதான் பிள்ளைகளுக்குத் தேடிவைத்துப் போவதாக இருக்கும்!

ஒவ்வொரு தமிழர்களும் தமது இன்றைய நிலையைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். ஐந்து ரூபா கொடுத்துப் பிறப்புப் பத்திரத்தில் பெயரை மாற்றும் எண்ணம் கைவிடப் படவேண்டும். தமிழ்மக்கள் தமக்கு வழிகாட்டும் தலைவர்களுக்கு ஊக்கமளித்துப் பின்பற்றவேண்டும்”.

நியாயவாதி திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையும் பேசினார். பல நாடக நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# ‘ஒத்துழைப்புமூலம்முன்னேறலாம்’

உடுப்பிட்டி, வியாழன்

“துரிதகெதியில் முன்னேற்றமடைந்துள்ள உலக நாடுகளை எடுத்து நோக்குவோமானுல் அந்நாடுகளின் கைத்தொழில் வளமே அவ்வுயர்ச்சிக்குக் காரணமாகும். இலங்கையிலும் வேலையில்லாத படித்த வாலிபர்களின் வளமான வாழ்வுக்கு வழிகாட்டுவதற்கென கட்டிடக் கலையியல் பயிற்சி நிலையங்களை அரசாங்கம் தொழிற்கந்தோர்கள் மூலம் நடாத்திவருகிறது. இவ்வரிய சந்தர்ப்பத்தை ஒவ்வொரு இளைஞனும் பயன்படுத்தவேண்டும். உலகம் என்னும் இயந்திரத்திற்கு ஒவ்வொரு சிறிய கைத்தொழில்களும் அச்சாணி போன்று முக்கியமானது” என்று நெல்லியடியிலுள்ள கட்டிடக் கலையியல் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்திற்குத் தலைமைவகித்த போதனுசிரியர் திரு. ஆ. சின்னத்துரை மேற்கண்டவாறு கூறினார்.

பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்ட பஹாய் இயக்கத் தூதுவரும் அமெரிக்க இரசாயனவியல் விற்பன்னருமான திரு. சலோனர் சூட் ‘கைத்தொழில் முன்னேற்றம்’ பற்றி பேசுகையில் கூறியதாவது:-

‘உலகநாடுகளில் கைத்தொழில் முன்னேற்றம் 1840ல் இங்கிலாந்தில் நடைபெற்ற புரட்சியின் எதிரொலியே. இங்குள்ள கப்பல் தொழிற்சாலைகளில் நிலக்கரி, சுண்ணும்பு முதலியன உபயோகித்து முன்னேற்றம் கண்டுள்ளார்கள். மக்களின் ஒற்றுமையான உழைப்புத்தான் நாட்டை முன்னேற்றமுடியும். ஆசியாவிலுள்ள ஜப்பானை எடுத்தால் அங்கு இரும்பு அதிகமாக இல்லாவிட்டாலும் அந்நாட்டு மக்கள் கவர்ச்சியுடனும் ஒற்றுமையுடனும் வேலைசெய்து முன்னேறியுள்ளார்கள்.

இலங்கை ஒரு சிறிய தீவாக இருந்தாலும் மக்களின் ஒத்துழைப்புடன் முன்னேறலாம் என்பதில் ஐயமில்லை. ஜப்பானியர்கள் கட்டிடக்கலையில் மிகவும் முன்னேறியுள்ளார்கள்.

### பஹாய் இயக்கம்

“உலகசமாதானமே பஹாய் இயக்கத்தின் உயிர்நாடி. மதம் மனிதனின் ஒற்றுமையை உருவாக்கவேண்டும். சிந்தனைக்கும் விஞ்ஞான அறிவிற்கும் ஒப்பானதாக மதம் அமைய வேண்டும். ஆன்மா சித்தியடைய மதமே ஒருவழி. உலக நாடுகளில் மொழிப்பிரச்னை கோரத்தாண்டவமாடுகிறது. தாய்மொழியுடன் உலகப் பொதுமொழியென இன்றொன்றிருந்தால் இந்தப்பிரச்னை உருவாகாது.

இவரது அமெரிக்க ஆங்கிலப் பேச்சை திரு. கே. டி. ஈ. இரத்திளம் மொழிபெயர்த்தார். திருவாளர்கள் கே. சிவானந்தவேல், க. நாகமுத்து ஆகியோரும் பேசினர். செயலாளர் திரு. செ. சோமசுந்தரம் நன்றியுரை நவின்றார்,

## கைத்தொழிலில் பயிற்சி

கொழும்பு, வியாழன்

கைத்தொழில் நிர்வாகஸ்தர்கள், மேற்பார்வையாளர்கள், தொழில் நுட்ப அதிகாரிகள் ஆகியோருக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமொன்றை கைத்தொழில் அமைச்சு தயாரித்துள்ளது.

## அழகரின் மறைவு

காலம் சென்ற திரு. கதிர்காமர் அழகர் ஆனிமாதம் 24-ம் நாள் 1895-ம் ஆண்டு சுன்னுகத்தில் பிறந்தார். இவர் தமது ஆரம்பகல்வியை மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையிலும், சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் பயின்று பின்பு உயர்நிலைக் கல்வியை மலாயா நாட்டில் பெற்றார். 18 வயதிலே மலாயா அரசாங்க உத்தியோகத்தில் அமர்ந்து, பொது மராமத்து இலாகாவில் பிரதம இலிகிதராகவும் ஈற்றில் நிதி உதவி அதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளார். 35 வருட சேவையின்பின் இளைப்பாறித்தன் தாயகம் திரும்பிய திரு அழகர் தம் பிறப்பிடமாகிய சுன்னுகத்தில் பொது நல, சைவாபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டு இடையருது உழைத்து வந்தார். அவர் ஆற்றிய பணியின் விளைவே சுன்னுகம் ஐயனுர் கோவிலில் உயிர்ப்பலி நிறுத்துதற்குக் காரணமாகும். சிறந்த சைவ சமயசீலராகவும், கல்விக்களஞ்சியமாகவும் திகழ்ந்த திரு. அழகர் எத்தனையோ பூசல்களும், போட்டிகளும் எதிர்நோக்கிய போதிலும் சளைக்காது நின்று போராடித் தடுக்கமுடியாது பல்லாண்டு காலம் நடைபெற்ற ஐயனுர் கோவில் உயிர்ப்பலிக்கு ஒரு முற்றுப் புள்ளிவைத்தார்.

ஐயனுர் கோவிற் தேர்த் திருப்பணிக் கர்த்தராகவும், புராண படன பாராயணம் போன்ற புனித கைங்கரியங்களை நடாத்துபவராகவும் விளங்கிய திரு. அழகர் சுற்றத்தார் பலரின் உயர்வுக்கும், மலர்ச்சிக்கும் உறுதுணையாக விளங்கியுள்ளார். இவர்மூன்று ஆண், இரு பெண்மகவுகளுக்குத்தந்தையாவார்.

குறுகிப் பருத்த மேனியும், நீறுதவழும் நெற்றியும், கண்ணியம் சிந்தும் பார்வையும் புன்சிரிப்பும் தான் அப்பெரியாரின் உண்மைத்தோற்றம். தாத்தா என்று அழைகத்தூண்டும் திரு. அழகர் அமரராகி நேற்றுடன் முப்பத்து ஒரு நாட்கள் பூர்த்தியாகி விட்டன. அவரின் ஈடு இணையற்ற சேவையை நாம் பெருமிதத்துடன் பாராட்டுவதோடல்லாமல் அன்னுரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

—க. உமாபதி

## சமரச முயற்சியில் பொலிஸ் இன்ஸ்பெக்டர்

### தொழிற்சங்கத் தலைவர் பாராட்டு

பரந்தன், வியாழன்

பரந்தன் ரசாயன கூட்டு ஸ்தாபனத்தின் 3 தொழிலாளர் யூனியன்களும் கூட்டு ஸ்தாபனத்தின் உணவுவிடுதிச்சாலைசம்பந்தமாக உற்பத்தி மானேஜர் கடைப்பிடித்துவரும் பிடிவாதமான கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்ய தீர்மானித்துள்ளதாகவும் உற்பத்தி மானேஜர் எந்தவிதமான ஆர்ப்பாட்டத்தையும் நசுக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் பொலிசாரைக் கேட்டுக்கொண்டபோதிலும் தொழிலாளர் யூனியனுக்கும் மானேஜருக்குமிடையிலுள்ள உறவுமுறையைப் புரிந்து கொண்ட யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரின்டனின் சாமர்த்தியமான நடவடிக்கையால் எதுவித அசம்பாவிதமும் நிகழவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் பொன்னம்பலம் பேச்சுவார்த்தைகள் மூலம் இருதரப்பினரையும் இணைப்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள் போற்றப்படத் தக்கதொன்றென்றும், தொழிலாளரை நிர்வகிக்கும்முறையைஒருபொலிஸ் அதிகாரியிடமிருந்து உற்பத்தி மானேஜர் கற்றுக்கொள்ள நேர்ந்தது வருந்தத்தக்கதென்றும் தொழிற் சங்கத் தலைவர் திரு. என். ராமநாதன் தெரிவித்துள்ளார்.


REGAL — JAFFNA

NOW SHOWING

Daily 3Shows. Sats.&Suns. Four

TOKYO by NIGHT

( Tohoscope - Colour )

(ADULTS ONLY)



சினிமாஸ் திரைகளில்

அடுத்த திரை விருந்து

எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி

மற்றும் பலர் நடித்த

நானும் ஒரு பெண்

தென்னுட்டில் 125 நாட்களுக்கு மேல் ஓடிய உன்னத தமிழ் திரை விருந்து

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

நிந்தாவூர் சினிமா (நிந்தாவூர்) ராஜ்மகால் (கலமுனை) சந்தியா (கம்பளை)

மற்றும் 4 திரைகளில்



எம். ஜி. ராமசந்திரன்—பி. சரோஜாதேவி நடித்த

பெரிய இடத்துப் பெண்

உதை பந்தாட்டம்

# சிலாபம் சாம்பியனுடன் திறமையாக விளையாடிய யாழ்ப்பாணக் கோஷ்டிகள்

## மூன்று போட்டிகளில் ஒன்றில்மட்டுமே சிலாபம் வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம், வெள்ளி சிலாபத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்த சிலாபம் சாம்பியன் கோஷ்டிக்கும் இங்குள்ள மூன்று கோஷ்டிகளுக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில், சிலாபம் சாம்பியன் கோஷ்டி ஒரு போட்டியில் மட்டுமே வெற்றியீட்டியது.

சிலாபம் உதைபந்தாட்டச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டிகளில் சாம்பியனாக தெரிவு செய்யப்பட்ட "கோல்டன் றைஸ்" உதைபந்தாட்டக் கோஷ்டியினர் மூன்றுநாள் விஜயம் செய்யும் பொருட்டு இங்கு வந்தனர். கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ். கிறீன் பீல்ட் கோஷ்டியுடன் நடைபெற்ற முதற்போட்டியில், சிலாபம் கோஷ்டியினர் 2 கோல்களும், கிறீன்பீல்ட் கோஷ்டியினர் 6 கோல்களும் போட்டனர். இப்போட்டியில் நான்கு அதிகப்படியான கோல்களால் கிறீன்பீல்ட் கோஷ்டி வெற்றி பெற்றது. கிறீன்பீல்ட் கோஷ்டியைச் சேர்ந்த தேவராசா, மார்ட்டின் ஆகியோர் திறமையாக விளையாடினர்.

செவ்வாய்க்கிழமை, கொழும்புத்துறை கலாசாலை மைதானத்தில் நடைபெற்ற யாழ் புனிதவளன் கோஷ்டியுடன் சிலாபம் கோஷ்டி மோதிக்கொண்டதில், புனிதவளன் கோஷ்டி ஒரு கோலும் சிலாபம் "கோல்டன் றைஸ்" கோஷ்டி மூன்று கோல்களும் போட்டுக்கொண்டன. இப்போட்டியில் மட்டுமே சிலாபம் கோஷ்டி இரண்டு அதிகப்படியான கோல்களால் வெற்றியீட்டியது.

புனிதவளன் கோஷ்டியைச் சேர்ந்த அரியரத்தின விளையாட்டு பாராட்டக்கூடியதாக விருந்தது.

நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவதும் இறுதியானதுமான போட்டியில், யாழ்ப்பாணம் சென். அன்ரனிஸ் கோஷ்டி ஏழு அதிகப்படியான கோல்களால் சிலாபம் சாம்பியன் கோஷ்டியைத் தோற்கடித்தது. கொழும்புத்துறை கலாசாலை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் சென். அன்ரனிஸ் கோஷ்டி 8 கோல்களும் சிலாபம் "கோல்டன் றைஸ்" கோஷ்டி ஒரு கோலும் போட்டன. சென். அன்ரனிஸ் கோஷ்டியைச் சேர்ந்த அல்போன்ஸ், மரியநாயகம், குணளன், சேவியர் ஆகியோர் குறிப்பிடத்தக்க முறையில் விளையாடியிருந்தனர்.

சிலாபம் கோஷ்டிக்கு கிறீன் பீல்ட் கோஷ்டியினர் அளித்த விருந்துபசாரமொன்றில் சிலாபம் கோஷ்டியின் காரியதரிசி நன்றிதெரிவித்துப் பேசுகையில்; வடக்கு; தெற்கு மாகாணங்களுக்கிடைவே உள்ள வேற்றுமைகளை இது போன்ற விளையாட்டுகளினால் ஏற்படும் சிநேகித ஒற்றுமையினால் தான் களைந்தெறிய முடியுமென்றும், யாழ்ப்பாண கோஷ்டிகள் சிலாபத்துக்கும் விஜயம் செய்ய வேண்டுமென்றும் கூறினார்.

---

## வானொலி நிகழ்ச்சிகள்

### வெள்ளி 1-5-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 பக்திப்பாடல்கள் — ஏ. வேல்சாமி, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானஞ்சலி, 7-15 பாட்டு — எஸ். விஜசித்தம்பி, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 மேதினம் — எஸ். டி. சிவநாயகம் — பேச்சு, 9-30 நேயர் விருப்பம், 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 காந்திஅஞ்சலி.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 டி. நரஸிம்மாச்சாரி — பாட்டு.

மாலை 5-15 அய்யம்பேட்டை எஸ். வேணுகோபாலபிள்ளை — நாகஸ்வரம்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 பொங்கி எழும் பாரதம் — சித்திரம். 7-45 டி. சௌடய்யா — வயலின், 9-15 இசைமாலை, 9-30 அருணகிரிநாதர் — இசைவிழா, 10-35 அருணகிரிநாதர் — இசைவிழா.

---

## "பதவியை துறந்து தேர்தலை நடத்துக"

### பிரதமருக்கு இரியகொல்லை கோரிக்கை

நீர்கொழும்பு, புதன்

"இந்த நாட்டைத் தொழிலாளர்களின் சொர்க்கமாக்குவோம் எனக் கூறிவந்த இடதுசாரிகள்; தொழிலாளர்களின் 21 அம்சக் குறைந்த பட்சக் கோரிக்கைகளைப் பெற்றுத்தருவதில் அலட்சிய பாவத்தோடு நடந்துகொள்வதன் மூலம் தாம் நம்பிக்கைக்குகந்தவர்களல்ல என நிலைநாட்டி விட்டார்கள். காலஞ்சென்ற பிரதமரை அணுகவும் அஞ்சிய கம்யூனிஸ்டுகள், இன்றைய பிரதமரிடம் தஞ்சம் புக முயல்கிறார்கள். எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா தாம் காலமாவதற்குச் சில தினங்களுக்கு முன்பு குருநாகலில் நடந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மகாநாட்டிற் கூட இடதுசாரிகளை வன்மையாகக் கண்டிக்கத் தவறவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது."

பிற்றிப்பனையில் நடைபெற்ற பிரமாண்டமான யு. என். பி. ஆதரவாளர்களின் கூட்டத்தில் பேசும்போது திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை மேற்கண்டவாறு தெரிவித்தார். இக் கூட்டத்துக்கு நீர்கொழும்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. டி. குயின்டன் பெர்ணாண்டோ தலைமை தாங்கினார்.

அவர் மேலும் பேசியதாவது: ஆளுங் கட்சியில் ஊழல்கள் மலிந்துவிட்டன. யு. என். பி. அதிகாரத்தைக் கைப்பற்றிவிட்டால் தவறான வழியில் தாம் திரட்டிய செல்வத்துக்கும், செல்வாக்குக்கும் ஆபத்து வந்துவிடுமோ என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். ஒழுங்கற்றவகையில் ஊழல் மலிந்த அரசாங்கத்தை பிடிவாதமாகப் பதவியில் வைத்திருக்க முயலும் பிரதமர் மக்களால் அளிக்கப்படாத தமது பதவியைத் துறந்தால் என்ன?"

திருவாளர்கள் நியூட்டன் ஜயமன்ன, என். டென்ஸில் பெர்ணாண்டோ ஆகியோரும் பேசினர்.

---

## இன்று நடைபெறும் ..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தேவைப்படும் அத்தியாவசியமான உணவுப்பொருள்களின் இறக்குமதியை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டுமென்றும் இப்பொருள்கள் கூட்டுறவுக்கடைகள் மூலமாகவும் தனிப்பட்ட சில்லறை வியாபாரிகள் மூலமாகவும் பொது மக்களுக்குக் கிடைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இக்கூட்டம் கோருகின்றது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அத்தியாவசியமான பொருள்களுக்கும் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசியமான பொருள்களுக்கும் சட்டப்படி ஒரு குறிப்பிட்ட விலை நிர்மாணிக்கப்பட வேண்டுமென்று இக்கூட்டம் கோருகின்றது.

தமது சொந்த நலனை விரும்பும் தரகர்களை ஒழித்து பொதுமக்களுக்கு நியாயமான விலையில் பொருள்கள் கிடைக்கக்கூடிய முறையில் மீன், மரக்கறிகளை வாங்கி விநியோகம் செய்யும் பொருட்டு திறமைமிக்க ஸ்தாபனமொன்று அமைக்கப்படவேண்டும்.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கு முழு ராஜீய அங்கீகாரமும் அளிக்கும்படி இலங்கை அரசாங்கத்தை இக்கூட்டம் கோருகின்றது.

கத்தோலிக்க நடவடிக்கைகளை விசாரணை செய்யும் பொருட்டு ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கவேண்டுமென்று இக்கூட்டம் கோருகின்றது. இலங்கையிலுள்ள அமெரிக்க சமாதான படையினர் அமெரிக்க குரல், ஆசிய நிறுவனம் ஆகியவை கலைக்கப்படவேண்டுமென்றும் இக்கூட்டம் கோருகின்றது.

விவசாயி, தான் கொடுக்கும் விளைபொருளின் உரிய பெறுமதியை அடையும் பொருட்டு உத்தரவாத விலைத் திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும். கிராமப்புறங்களில் கடனாளிகளாகவுள்ள மக்களுக்கு உதவி செய்யும் பொருட்டு ஒரு திட்டம் வரையப்படவேண்டும். மக்கள் வங்கியின் நன்மைகளை கிராமப்புற மக்களும் அடையும் பொருட்டு மக்கள் வங்கிக் கிளைகள் கிராமப்புறங்களுக்கும் விஸ்தரிக்கப்படவேண்டும். விவசாய கமிட்டிகளிலிருந்து காணிச் சொந்தக்காரர்கள் நீக்கப்படவேண்டும். குடியேற்றத் திட்டங்கள் நெற்காணிச் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படவேண்டும்.

நகர கிராமப்புறங்களில் வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப் பளிக்கும் பொருட்டு திட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டும். வேலையில்லாத இளைஞர்களுக்கு விவசாய, கைத் தொழில்களில் ஊக்கமளிக்கும் பொருட்டு பயிற்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். வேலையில்லாத இளைஞர்களுக்கு பயிற்சிகள் அளிக்கும் பொருட்டு நாட்டின் பல பகுதிகளிலும் அரசாங்க தொழில் நுட்ப, வர்த்தக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அரசாங்க துறைகளிலும் அரசாங்க கார்ப்பரேஷன்களிலும் வேலை பார்க்கும் ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அரசியல் தொழிற்சங்க உரிமைகள் வழங்கப்படவேண்டுமென்று இக்கூட்டம் கோருகின்றது.

அரசாங்க நிர்வாக சபைகளுக்கும் மற்றும் கடைகளுக்கும் தொழிலாளர்கள் தெரிவு செய்யப்படுவதற்கு உரிமை வழங்கப்படவேண்டும். தோட்டங்களில் வாழும் தொழிலாளர்களுக்கு குடியுரிமை அளிக்கப்படவேண்டும். தோட்டங்களில் கூட்டங்கள் நடத்த தொழிற்சங்கவாதிகளுக்கு உரிமை அளிக்கப்படவேண்டும் என்றும் இக்கூட்டம் கோருகிறது.

---

## அரசாங்க அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாநகரப் பிரதேச வட்டாரங்களின் எல்லைகளை நிர்ணயிப்பதற்காய விசாரணை அதிகாரசபை

கௌரவ உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் விடயங்கள் பற்றி விசாரணை செய்து அறிவிப்பதற்கு ஒரு அதிகாரசபையை நியமித்துள்ளாரென்று இத்தால் பொது சனங்களுக்கு அறிவிக்கப்படுகின்றது:-

(அ) யாழ்ப்பாணம் மாநகரத்துடன் அதனை அண்டியுள்ள பிரதேசம் அல்லது பிரதேசங்கள் எதையும் இணைத்து பெரிதாக்கப்பட வேண்டுமா;

(ஆ) யாழ்ப்பாண மாநகரத்திற்கு எவை எல்லைகளாயிருத்தல் வேண்டுமா;

(இ) சனத்தொகை, இடப்பரப்பு முதலியவையை ஆதாரமாகக் கொண்டு யாழ்ப்பாண மாநகரம் எத்தனை வட்டாரங்களாக பிரிக்கப்பட வேண்டும்;

(ஈ) மேற்படி வட்டாரங்கள் எந்தெந்த எல்லைகளைக் கொண்டு வகுக்கப்பட வேண்டும்;

மேலேயுள்ள விசாரணை அம்சங்களுக்குள் அடங்கும் விடயங்கள் அனைத்தையும் அல்லது எதையும் பற்றித தத்தம் யோசனைகளைத் தெரிவிக்குமாறு உள்ளூர் அதிகாரத்தாபனங்களையும், சங்கங்களையும், சபைகளையும், வேறு தாபனங்களையும், வரியிறுப்போரையும், பொதுசனங்களையும் அதிகார சபை கேட்டுக் கொள்கின்றது.

யோசனைகள் யாவும் எழுத்தில் (இணைப்பிரதிகளாக) இருத்தல் வேண்டும். ஒவ்வொரு விடயம் பற்றியும்கூறப்படும் யோசனைகள் தனித்தனித் தலையங்கத்தின் கீழ் எழுதப்பட வேண்டும்.

அத்தகைய யோசனைகளில் அடங்கியுள்ள எவ்விடயம் பற்றியேனும் அதிகாரசபைக்கு விளக்கம் வேண்டப்படின் அல்லது யோசனை கூறுபவர்கள் வாய்மொழிச் சாட்சியம் கூறுவதற்கு குறிப்பாக விரும்புவார்களாயின், பின்னர் வாய்மொழியாக சாட்சியம் கேட்கப்படும்.

குறிப்புகள் யாவும் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ந்திகதி திங்கட்கிழமைக்குப் பிந்தாமல் அதிகாரசபைக்குக் கிடைக்க வேண்டும்.

கடிதங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புக:-

செயலாளர்,<br>
யாழ்ப்பாணம் மாநகரப் பிரதேச வட்டாரங்களின் எல்லை நிர்ணய அதிகாரசபை,<br>
உள்ளூராட்சி அலுவலகம்,<br>
இல. 1, கச்சேரி ஒழுங்கை,<br>
யாழ்ப்பாணம்.

அதிகாரசபைக் கட்டளைப்படி,<br>
சி. சி. மாணிக்கவாசகர்,<br>
செயலாளர்,<br>
யாழ்ப்பாணம் மாநகரப் பிரதேச வட்டாரங்களின் எல்லை நிர்ணய அதிகார சபை.<br>
347

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்

காரைநகர் கிழக்கு தோப்புக்காடு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில் முன் கொட்டகைக் கோப்பிஷ வேலைக்கு பொருட்கள் தவிர்த்து கூலி மட்டும் குறித்து விண்ணப்பங்கள் 9-5-64 பி. ப. 4 மணிக்கு முன் கோரப்பெறுகின்றன.

இவ்வேலையைச் செய்ய விரும்புபவர்கள் நேரில் வந்து தெ. சங்கநிருவாகசபையினரிடம் விருப்பத்தைத் அறிந்து விண்ணப்பப்பத்திரத்தை சங்கத் தலைவர் அவர்களிடம் பெற்றுக் கொள்ளவும்.

இங்ஙனம்,<br>
செ. முருகநாதபிள்ளை,<br>
346 கௌரவகாரியதரிசி

---


## வரி விளம்பரம்

**கபிரியேல் தயாரிப்புகள்**

1. கபிரியேல் பெயின் ஓயில் சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஒயின்மென்ற் சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண்களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம் தடிமன், தலையிடி, சந்துளி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள். GABRIELS, Chunnakam. 273

---

**விற்பனைக்கு**

வவனியாவில் இருந்து மன்னார் றோட்டில், றோட்டு அருகாமையில் உள்ள காணியில் விறகு விற்பனைக்கு உண்டு. விண்ணப்பிக்கவும்: பாலசிங்கம் பிறதர், 30, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 272. 275

---

**வாடகைக்கு**

கொட்டடி, சீனிவாச றோட்டில் எல்லாவித நவீன வசதிகளுடன் கூடிய புதுவீடு வாடகைக்குண்டு. ஒரு கிழமைக்குள் திருமதி என். முத்தையா, 32/2, சீனிவாசறோட், கொட்டடி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். 279


---

## ரூ. 3 கோடி கடன் திரட்ட முடிவு

கொழும்பு, வியாழன்

இலங்கை அரசாங்கம் நாலரை சதவீத வட்டியில் ரூ. 3 கோடி கடன் திரட்ட திட்டமிட்டுள்ளது.

---

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வீங்கிவிட்டதாம். உடனே அவரை பண்ணைத்தெருவிலுள்ள (ஆயுர்) டாக்டர் சிற்றம்பலத்தின் வீட்டுக்குஅழைத்துச்சென்று சிகிச்சைசெய்ததாயும் அது குணமாகிவிட்டதாகவும் அவர் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

பாம்பு, விஷப்பூச்சிக்கடி முதலிய சிகிச்சைக்காக வெகு தூரத்திலிருந்தும் அங்கு வருவதாயும், அவர் இச்சிகிச்சைக்கு எவ்வித பணமும் வாங்குவதில்லை என்றும் இலவசமாகவே சிகிச்சை அளிப்பதாயும் கேட்டதும் வியப்பாகஇருந்தது. இதற்குப் பணம் வாங்கப்படாதென்று அவரது பெரியோர்கள் கூறியிருக்கிறார்களாம்!

அங்குவந்து இருந்து சிகிச்சைபெற போதிய வசதியில்லையாதலால், வசதியான கட்டடத்தை அரசாங்கம் கட்டித்தரவேண்டுமென்று யாழ்ப்பாணம், வேலணை முதலிய ஸ்தல ஸ்தாபனங்களும் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளதாகத் தெரிகிறது.

தென்னிலங்கையிலே விஷவைத்தியர் ஒருவருக்கு அரசாங்கம் இவ்வித விசேஷ வசதிகளைச் செய்துகொடுத்துள்ளதாம். ஆகவே இங்கும் அவ்வித வசதியை, பொதுமக்களின் நன்மைக்காகச் செய்து கொடுக்கவேண்டியது அவசியமும் அவசரமுமாகும்.

* * *

உளரொளியை உள்ளத்தினுள்ளே நின்ற ஓங்காரத்துட் பொருள்தான் ஆயினானை, விளரொளியை விடுசுடர்கள் இரண்டும் ஒன்றும் விண்ணொடுமண் ஆகாசமாயினானை, வளரொளியை மரகதத்தினுருவினானை வானவர்களெப்பொழுதும் வாழ்த்தியேத்தும், கிளரொளியைக் கீழ்வேளூராளுங் கோவைக் கேடிலியைநாடுமவர் கேடிலாரே.

—திருநாவுக்கரச

# நாய்க்கு அருகில் கை, கால் அற்ற குழந்தையின் சடலம்!

யாழ்ப்பாணம், வியாழன்

அடையாளங் காணப்படாத, கைகளும் கால்களும் அற்ற நிலையில் குட்டி ஈன்றுள்ள ஒரு நாய்க்குப் பக்கத்தில் இறந்த குழந்தையொன்றின் சடலம் சுதுமலையிலுள்ள கோணவளையல், பொன்னையா பெண் சின்னம்மாவின் வளவில் காணப்பட்டது.

இக்குழந்தையின் மரணம் பற்றி யாழ்பபாணம் மரண விசாரணை அதிகாரி திரு எஸ. கனகரத்தினம் விசாரணை நடத்தினார்.

இக்குழந்தை பூரண மான பிள்ளையாக இறந்த பின்பே பிறந்ததென்று சட்டவைத்திய அதிகாரி அபிப்பிராயம் தெரிவித்ததன்மேல், குழந்தையின் பிறப்புப்பற்றி மறைத்த தாயைக் கண்டுபிடிக்குமாறு திரு. கனகரத்தினம் பொலிசாருக்குக் கட்டளையிட்டார். குழந்தையை நாய் தூக்கிக் கொண்டுவந்து அதன் கால் கால்களைத் தின்றிருக்கவேண்டுமெனவும் சட்டவைத்திய அதிகாரி அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

## யோகர் சுவாமியின் ஞாபகார்த்த தினம்

யாழ்ப்பாணம், வியாழன்

யோகசுவாமி அவர்களின் ஆத்மா சாந்தியடைந்த 40-ம் நாளை நினைவுபடுத்தும் வகையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் அபிஷேகமும், 12 மணிக்கு மகேசுர பூசையும் நடைபெறும். அடியார்களெல்லோரும் இதில் கலந்து கொள்ளுமாறு ஆச்சிரமநிர்வாகி திரு. ச. திருநாவுக்கரசு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கி. ச. அங்கத்தவர் பதவி இழப்பு

நல்லூர், வியாழன்

புலோலி கிராமசபை முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. முத்ததம்பி தம்பிராசா தமது அங்கத்துவ பதவியை இழந்துள்ளார்.

1-ம் வட்டார அங்கத்தவர் திரு. மூத்ததம்பி தம்பிராசா அவருடைய தெரிவின் பின்னர் சங்கத்திற்கு அறிவிக்காமல் 3 கூட்டங்களுக்குச் செல்லாமையால் அவர் பதவியை விட்டு விலகியுள்ளதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் அறிவித்திருக்கிறார்.

## திருமண அழைப்பு

திரு. அ. இரத்தினசபாபதி அவர்களின் புதல்வன் திருநிறை செல்வன் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்திக்கும் (R. S. K. மூர்த்தி) முகாந்திரம் S. P. இராசநாயகம் அவர்களின் புத்திரி திருநிறை செல்வி இந்திராணிக்கும் நிகழும் குரோதி வருடம் சித்திரை மாதம் 21-ம் திகதி (3-5-64) ஞாயிற்றுக்கிழமை காலை 8-50 முதல் 10-25வரை உள்ள சுபமுகூர்த்தத்தில் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் (புதுக்கோயில்) திருமணம் நிகழும். அத்தருணமும் அன்று மாலை 5 மணிககு மணமகன் இல்லத்தில் நடைபெறும் வரவேற்பு உபசாரத்திலும் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்து ஏகுமாறு நண்பர் உறவினர்களை அன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,

S. காமோதரம்பிள்ளையும் பாரியாரும்.

இல. 81, கே. கே. எஸ். வீதி, கொக்குவில். 276

## "மூன்று வழிகள் உள்ளன"

—நாகநாதன்

கொழும்பு, புதன்

கோடீஸ்வரன் வழக்கில் நீதியரசர் திரு கிறெஸ்டர் வழங்கிய தீர்ப்பை வரவேற்றுக் குறிப்பிடுகையில் அரசாங்கத்துக்கு இப்பொழுது 3 வழிகள் உள்ளன் என்று நல்லூர் எம். பி. திரு. ஈ. எம். வி.நாகநாதன் தெரிவித்தார்.

(1). நீதியரசரின் தீர்ப்பை ஏற்று மொழிப்பிரச்சனை சம்பந்தமாக சர்வகட்சித் தலைவர்களைக் கூட்டித்தீர்வு காணுதல்;

(2). தீர்ப்பை எதிர்த்து வாதாடல்;

(3). இந்த நல்ல சந்தர்ப்பத்தை விட்டுவிட்டு நாட்டில் மனக்கசப்பை மேலும் வளர்த்தல் ஆகிய 3 வழிகளே திரு. நாகநாதன் குறிப்பிட்டவையாகும்.

## இந்துசமய சங்க ஆண்டு விழா

யாழ்ப்பாணம், வியாழன்

கொட்டடி இந்து சமய விருத்திச் சங்க ஆண்டுவிழா வெள்ளிக்கிழமை கொட்டடி நமசிவாய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

சுவாமிசச்சிதானந்தயோகீஸ்வரர் தலைமையில் நடைபெறும். இந்த விழாவில் பல அறிஞர்கள் உரை நிகழ்த்தவிருக்கிறார்கள் என அறிவிக்கப்படுகிறது.

## வடபகுதி மீனுக்கு விலை குறைவு

### எம். பி. புகார்

நல்லூர், வியாழன்

வடபகுதியில் பிடிக்கப்பட்டு கொழும்பு கொண்டு செல்லப்படும் மீன்களுக்கு சரியான விலை கிடைப்பதில்லை என்று பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் மீன்பிடி இலாகாவிடம் தெரிவித்திருக்கிறார்.

கொழும்பு, கண்டி ஆகிய இடங்களில் யாழ்ப்பாண மீன்களுக்கு மிகக்குறைந்த விலையை கொடுப்பதாக மீன்பிடியாளர்கள் பருத்தித்துறை எம். பி. யிடம் புகார் செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்து திரு. துரைரத்தினம் மீன்பிடி இலாகா அதிபரைச் சந்தித்து இது சம்பந்தமாகப் பேசினர். பின் தொழில் அமைச்சருடனும் திரு. துரைரத்தினம் பேச்சு நடத்தியதாகத் தெரிகிறது.

திரு. துரைரத்தினத்திடம் மீன்பிடி இலாகா அதிகாரிகள் யாழ்ப்பாண மீன்களுக்கு கூடிய விலை கிடைக்க வேண்டுமானல் கொழும்பு, கண்டி ஆகிய இடங்களில் வியாபார நிலையங்களைத் திறக்கும்படி தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண மீன்களுக்கு கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் பிற இடத்து மீன்களுக்கு கிடைக்கக் கூடியதாக வியாபார நிலையங்களை நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையின் மீன்பிடித் தொழிலில் பதினைந்து வித மீன்கள் யாழ்ப்பாணததில் பிடிக்கப்படுகின்றன. இம்மாதத்தில் மீன்கள் ஏராளமாகப் பிடிக்கப்படுகின்றன.

## புத்தூர் கி. ச. தேர்தல் முடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன்

நேற்று நடைசெற்ற புத்தூர் கிராமசபைத் தேர்தல் முடிவுகள் வருமாறு:-

2-ம் வட்டாரம்: கே. பத்மநாதன், 4-ம் வட்டாரம்: ந. பாலகிருஷ்ணன், 5-ம் வட்டாரம், கே. சின்னத்துரை, 6-ம் வட்டாரம்: எஸ். கதிரவேலு, 7-ம் வட்டாரம்: மு. திருநாவுக்கரசு.

மற்ற 5 வட்டாரங்களிலும் அங்கத்தவர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டது தெரிந்ததே.

கோடீஸ்வரன் வழக்கு

# அட்டோர்ணி ஜெனரல் ஆலோசனை கோரப்படும் அதன்பின்னரே நடவடிக்கை எடுப்பதென மந்திரிசபை முடிவு

கொழும்பு, புதன்

**கோடீஸ்வரன் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு குறித்து அட்டோர்ணி ஜெனரலுடன் ஆலோசனை செய்து அவர் எவ்வித அபிப்பிராயம் தெரிவிக்கிறர் என்பதைக் கொண்டே மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதென மந்திரிசபை முடிவு செய்துள்ளது.**

இன்று நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்தில், கோடீஸ்வரன் மொழிவழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புக் குறித்து பலமாக விவாத நடைபெற்றதாக அறியப்படுகிறது.

உத்தியோக மொழிச் சட்டத்தை வெகுவேகத்துடனும், எதுவித தடையுமின்றி அமுல் செய்வதற்கு அரசாங்கசேவை நிதிச் சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டுமென்ற நீதி மந்திரி திரு. ஜி. வி. பி. ஏ. டி. சில்வாவின் மகஜர் பற்றி சபையில் விவாதிக்கப்பட்டது. கோடீஸ்வரன்வழக்கின் தீர்ப்பு பற்றி எந்தவித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுபற்றி அட்டோர்ணி ஜெனரலின் ஆலோசனை எவ்விதம் அமைகின்றது என்பதைப் பொறுத்து அதன் பின்னரே அரசாங்க சேவை நிதிச்சட்டத்தை திருத்துவதுபற்றி ஆலோசிப்பதென பிரதமர் தெரிவித்தார்.

## நாடெங்கும் நடைபெறும் மேதின விழாக்கள்

கொழும்பு, புதன்

கொழும்பில் ஐந்து மேதின விழாக்களும் பிறமாகாணங்களில் பல விழாக்களுமாக இந்த வாரத்தில் ஏராளமான மேதின விழாக்கள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி சுதந்திர சதுக்கத்திலும், யூ. என். பி. கட்சி ஹைட் பார்க்கிலும் மேதின விழாக்கள் கொண்டாடும்.

இலங்கை வர்த்தக யூனியன் காலையில் அரசினர் எழுதுவினைஞர் சங்கத் தலைமையகத்திலும் இலங்கை வர்த்தக சம்மேளனம் சீனவை ஆதரிக்கும் கோஷ்டியுடன் டி. மெல் பூங்காவில் மாலையிலும் மேதின விழாக்களைக் கொண்டாடும். இடதுசாரி ஐக்கியமுன்னணி யாழ்ப்பாணம், திருக்கோணமலை, அநுராதபுரம், அம்பாறை ஆகிய இடங்களில் மேதின விழா நிகழ்த்துமெனத் தெரியவருகிறது.

## கூட்டரசாங்கம்: மந்திரிசபை ஆராயவில்லை!

கொழும்பு, புதன்

இன்றுகூடிய மந்திரிசபையில் சுதந்திரக்கட்சி, இடதுசாரி முன்னணியுடன் கூட்டுசேர்வது பற்றி எதுவும்ஆராயப்படவில்லை இன்று கூடும் மந்திரிசபையில்கூட்டுஅரசாங்கம்பற்றி ஆராயப்படும் என அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்த்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## "அரசியலமைப்பை மாற்றுக"

### பிரதமருக்கு வாலிபமுன்னணி மகஜர்

கம்பகா, புதன்

"சர் ஐவர் ஜென்னிங்ஸ் தயாரித்த பிற்போக்கான அரசியலமைப்புச் சட்டத்தினலேயே நாம் இன்னமும் ஆளப்படுகிறோம். அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்தியமைப்பதற்காக ஒரு குழுவினை நியமிக்க வேண்டும். புதிய அரயலமைப்புச் சட்டத்தின் அடிப்படை, குடியாட்சி அந்தஸ்தை நமக்குப் பெற்றுத்தரும் வகையிலும் நமது பாரம்பரியத்துக்கும் கலாசாரத்துக்கும் இயைந்த வகையிலும் அமைதல் வேண்டும்" இவ்வாறு ஸ்ரீமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு ஸ்ரீ ல. சு. கட்சியின் அகில இலங்கை வாலிப முன்னணியால் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது

அந்த மகஜரில் மேலும் கூறியிருப்பதாவது:-

"பிரித்தானியர் பாராளுமன்ற அரசியலமைப்பு முறையைக் காண்பதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்குமுன்பே நாகரிகம் என்பது என்ன என்பதை அவர்கள் அறியாத காலத்திலேயே ஒழுங்கும் திறமையுமிக்க ஓர் அரசியலமைப்பு இலங்கையிலும் ஏனைய ஆசிய நாடுகளிலும் நிலவிவந்ததுண்டு".

## கூட்டுறவுஇயக்கத்தின் வெற்றி

கொழும்பு. புதன்

இலங்கை கூட்டுறவு இயக்கத்தின் 1961-62 ம் வருடத்துக்கான அறிக்கையில் இக்கால எல்லையுள 14,448 கூட்டுறவு சபைகள் ஸ்தாபனத்தில் பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாய கூட்டுறவு யூனியன் ரூ. 22,000 மொத்த லாபமாகப் பெற்றதாகவும் 62 ம் வருடத்தில் மாலைதீவுக்கு பாககு ஏற்றுமதி செய்யத்தொடங்கியதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஞானபாஸ்கரோதய சங்க ஆண்டு விழா

யாழ்ப்பாணம், வியாழன்

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் 44(வது ஆண்டு விழாவும் ஞானபாஸ்கரோதய மங்கையர்கழகத்தின் 14-வது ஆண்டு விழாவும் ஞானபாஸ்கரோதிய சனசமூக நிலயத்தின் 13-வது ஆண்டு விழாவும் எதிர்வரும் சனிக்கிழமை ஞானபாஸ்கரோதய வாசிகசாலை மண்டபத்தில் நடைபெறும்.

திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாக்களில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. செ. கோடீஸ்வரன், பண்டிதர் ச. இராமச்சந்திரன், திரு. கே. பி. முத்தையா, உட்படப் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

அன்று காலை 7மணியளவில் 10 மைல் நீள சைக்கிள் ஓட்டப் போட்டியொன்றும் வேறு நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

மறைந்த தலைவரின் உருவப் படத் திரைநீக்கமும் விழாவில் இடம்பெறும்.

## 2 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர்

புதுடில்லி, ஏப். 29

கடந்த ஞாயிற்றுக்கிழமை காஷ்மீர் யுத்த நிறுத்த எல்லைக்கோட்டை 9 ஆயுதம் தாங்கிய பாகிஸ்தானியர் தாண்ட முயன்றபோது, அவர்கள்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதால் இரு பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர்.

பூஞ்சுக்கு மேற்கே சிலமைல் தூரத்தில் இச்சம்பவம் நடைபெற்றதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரியொருவர் கூறினர். மிகுதிப்பேர் வந்த வழியே தப்பியோடிவிட்டனர்.

யுத்த நிறுத்த எல்லைக்கோடு மீறப்பட்டது குறித்து இந்தியா ஐ.நா. பார்வையாளர்களிடம் ஆட்சேபனை தெரிவித்துக்கொண்டிருக்கிறது.

## இந்து சமய விருத்தி சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

கொட்டடி இந்து சமயவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் சமீபத்தில் சங்கத் தலைவர் டாக்டர் சி. குருசாமி தலைமையில்நடைபெற்றது. வருடாந்தஅறிக்கை வாசித்து ஏற்கபட்டபின் புதுவருட உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது. பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: டாக்டர் சி. குருசாமி, உபதலைவர்: ஆசிரியர் திரு. வி. செல்லத்துரை, காரியதரிசி: ஆசிரியர் திரு. மு. இளையதம்பி, உப காரியதரிசி: ஆசிரியர் திரு. சி. தியாகராசா, தனாதிகாரி: விஷவைத்தியர் திரு. க. சிற்றம்பலம், உப தனாதிகாரி; திரு- நா. கிருஷ்ணசாமி.

பத்துப்பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது,

## அமெரிக்க திரைப்பட அரங்கம்

நல்லூர், வியாழன்

அமெரிக்க விஞ்ஞான திரைப்படக் கழகத்தினரும் அமெரிக்க தகவல் இலாகாவும் நடத்தும் விஞ்ஞான அரங்கம் மே மாதம் 4-ம, 5-ம் திகதி யாழ்ப்பாணத்தில் காண்பிக்கப்படவிருக்கின்றது.

இலங்கையில் விஞ்ஞானக் கல்வி வளர்ச்சிக்காக அமெரிக்க தகவல் நிலையம் மேற்கொண்டுள்ள இம்முயற்சிக்கு கல்விப் பகுதியினரும் இலங்கை விஞ்ஞான முன்னேற்றக் கழகத்தினரும் ஒத்துழைப்பு நல்கியுள்ளனர். இந்த விஞ்ஞான அரங்கில் ஆராய்ச்சியாளர், ஆசிரியர், மாணவர், பொதுமக்களுக்கு அறிவூட்டும் பல திரைப்படங்கள் காண்பிக்கப்படும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல்வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மே மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.